# தமிழரசு






1-1-1990
ரூ. 1




அண்ணாமலைப் பல்கலைக் கழக வைரவிழாவில், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கும், மற்றும் அறிஞர் பெருமக்களுக்கும் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், சிறப்பு 'டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தார் (14-12-89).

# இந்த இதழில்...




இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து முதல்வர் கலைஞர் பேச்சு வார்த்தை ... 2

தமிழ் இசைக்குப் பெருமை சேர்ப்போம் ... 3
-முதல்வர் கலைஞர்

ஏழை எளியோர் படித்துப் பயன் பெறும் திட்டம் ... 7

அமைதிப் புரட்சியின் அழியாச் சின்னம் ... 9

மாயூரம் வேதநாயகனார் ... 11

அண்ணாமலைப் பல்கலைக் கழக வைர விழா ... 17

திருவூர்த் திருக்கோயில் ... 33

தெருக்கூத்துக் கலை ... 35

இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி ... 41

கொடி நாள் நன்கொடை ... 47
மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020 சுக்ல ஆண்டு - மார்கழி 17

மலர்:20 1-1-1990 இதழ்:13



# இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து முதல்வர் கலைஞர் பேச்சு வார்த்தை

இலங்கையிலிருந்து சென்னை வந்த விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 15.12.89, 16.12.89 ஆகிய இரண்டு நாட்களிலும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

திரு. ஆண்டன் பாலசிங்கம் தலைமையில் வந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் சென்னையில் நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தையில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன், மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் ஆகியோர் பங்கேற்றனர்.

இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் 16.12.89 அன்று செய்தியாளர்களிடம் பேசும்போது - ''இந்தப் பேச்சுவார்த்தை இருதரப்பினருக்கும் திருப்திகரமாக அமைந்தது. இந்தப் பேச்சு வார்த்தையில் உருவான கருத்துத் தொகுப்பை புதுடில்லி செல்லும் போது பிரதமரிடம் எடுத்துக் கூறுவேன்'' என்று குறிப்பிட்டார்.

அதன்பின், 19.12.89 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் - மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களைப் புதுடில்லியில் சந்தித்தார். அதற்கு மறுநாளும் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அதுபற்றிப் புதுடில்லிச் செய்தியாளர்களிடம் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''நேற்றும் இன்றும் பிரதமரை நானும் மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறனும் சந்தித்துப் பேசினோம்.

''சென்னையில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தை பற்றிய விவரக் குறிப்புகளை அளித்ததோடு, அது குறித்து விரிவாக அவரிடம் பேசினேன். இப்போது உருவாகியுள்ள சூழ்நிலையில் தமிழ் ஈழத்தில் நிலையான அமைதி நிலவ வேண்டும் என்பதும், அகதிகள் பிரச்சினையால் இந்தியாவுக்கு மீண்டும் ஒரு சங்கடம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதும் எங்கள் பேச்சின் பிரதான அம்சமாக அமைந்திருந்தது.

''எங்கள் பேச்சு வார்த்தையின் தொடர்ச்சியாக இந்திய அரசு மிகவும் அக்கறையுடனும், விழிப்புணர்வுடனும் ஈழத் தமிழர்கள் பிரச்சினையில்ஆவன செய்ய முன்வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.''



# தமிழ் இசைக்குப் பெருமை சேர்ப்போம்

## முதல்வர் கலைஞர்

இன்று நடைபெறுகின்ற இந்த இனிய விழாவைத் தொடங்கி வைக்கின்ற வாய்ப்புப்பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் இசைச் சங்கத்தினுடைய 26வது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட வாய்ப்பினைப் பெற்ற எனக்கு இடையில் பல ஆண்டுகளுக்குப் பிறகு - சுமார் இருபதாண்டுகளுக்குப் பிறகு - இன்றைய தினம் இந்த ஆண்டு விழாவிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

தமிழ் இசைக்கு ஒரு விழா எடுக்க வேண்டும் - தமிழ் இசை விரிவாக பரவிட வேண்டும் - தமிழ் இசையை தமிழர்கள் போற்ற வேண்டும் - பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை அண்ணாமலை அரசர் அவர்கள் கொண்டிருந்த காரணத்தால் அவர்களுடைய எண்ணம் ஈடேறுகின்ற அளவிற்கு அவருடைய பணி சிறக்க அந்தக் காலத்திலேயே இசைவாணர்கள், மூதறிஞர் இராஜாஜி போன்றவர்கள், பேராசிரியர் கல்கி போன்றவர்கள் தந்த ஒத்துழைப்பும், சமுதாயத் துறையிலே - அரசியல் துறையிலே ஈடுபட்டிருந்த முறையே தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் மற்றவர்களும் உறுதுணையாக நின்றநிலையும் தமிழகத்திலே தமிழ் இசை இயக்கம் வளருவதற்கு, பெரிதும் உதவி புரிந்தன என்பதை வரலாற்றை உணர்ந்தவர்கள் மறந்திட இயலாது.

அத்தகைய ஒரு வரலாற்றை நாம் எண்ணிப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் தமிழ் இசையை வளர்ப்பதற்கு ஒரு இயக்கம் தேவைப்பட்டது என்பது இன்னும் நூறாண்டுகளுக்குப் பிறகு தமிழன் விழித்துக் கொண்டிருப்பானேயானால் அல்லது விழித்துக் கொண்டிருக்கின்ற தமிழனாக அவன் இருப்பானேயானால் தமிழ்நாட்டில் தமிழ் இசையை வளர்க்க ஒரு இயக்கம் இருந்ததா? என்று எண்ணி, கேலிப் புன்னகை புரிந்தாலும் புரியக்கூடும். ஆனால் நம்முடைய கடமையை நாம் நிறைவேற்றத் தவறக் கூடாது, நம்முடைய காலத்திலே - என்று எண்ணிய காரணத்தினாலேதான் அண்ணாமலை அரசர் அவர்களும், அவரைத் தொடர்ந்து பல தமிழ்ச் சான்றோர்களும், ஆன்றோர்களும் தமிழ் இசைவாணர்களும் இந்த இயக்கத்தை வலுப்படுத்தியிருக்கின்றார்கள்.




***இந்தியன் வங்கியின் 'இந்த் பாங்க் வணிக வங்கிச் சேவை' நிறுவனத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னையில் துவக்கி வைத்தார். (27.12.89)***

தமிழ் இசை இயக்கம் தோன்றிய போது அதற்கு எத்துணை எதிர்ப்பு இருந்தது என்பதை இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற பேரறிவாளர்கள் அனைவரும் அறிவீர்கள். ஏனென்றால் தமிழ் - அதற்கு ஒரு இசை-என்று சொன்னாலே அது மிக மலிவான ஒன்றாகக்கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. தமிழை விடுத்து வேறு மொழியிலே பேசினால்தான் - பாடினால்தான் - செயல்பட்டால்தான் பெருமை என்ற ஒரு நிலை இருந்த காரணத்தால், தமிழ் மொழியிலே பாடுவது என்பது ஒரு மலிவான ஒன்று என்று அன்று கருதப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் பல இசை நிகழ்ச்சிகளில் இறுதியாகப் பாடப்படுகின்ற தமிழ்ப்பாடல்கள் சில்லறை அல்லது உருப்படி என அழைக்கப் பட்டன, சலவைத்தொழிலாளியிடத்திலே ஆடைகளை எண்ணியெண்ணிப் போடும்போது எத்தனை உருப்படி என்று அவர் எண்ணிக் கொள்வதைப் போல, அல்லது நாம் எண்ணிக் கொள்வதைப் போல, அந்த உருப்படிகளிலே ஒன்றாகத்தான் தமிழ் இசைப் பாடல்கள் ஒரு காலத்திலே இருந்தன.

இப்படியே உருப்படி என்று தமிழ் இசைப் பாடல்களுக்குப்பெயர் இருந்தால் உருப்படுமா நாடு? உருப்படுமா மொழி? என்று எழுந்த வினாவின் அடிப்படையிலேதான் இந்த உணர்வே ஏற்பட்டு, தமிழ் இசைக்கு இன்றைக்கு ஆக்கமும் ஊக்கமும் உருவாகியிருக்கின்றன.

நான் ஒரு கருத்தைச் சொன்னால் யாரும் தவறாகக் கருதிக் கொள்ள மாட்டீர்கள். இனிமேல் 'ஆண்டு தோறும் நடைபெறுகின்ற இசை விழாக்களில் இசைவாணர்கள் கலந்து கொள்ள வேண்டும். இசை மழை பொழிய வேண்டும் என்று மாத்திரம் தான் இருக்க வேண்டுமேயல்லாமல், தமிழ் இசை தேவை என்பதற்காக ஒரு விரிவுரை, ஒரு விளக்க உரை இன்னமும் தேவைப்படுமேயானால், அதற்கு உண்மையான பொருள் தமிழன் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கின்றான் என்பதுதான்! எனவே அத்தகைய ஒரு நிலை ஏற்படாமல் இனியாவது இசையைப் பற்றிய நுணுக்கங்களை, இசையை எவ்வாறு பயிற்றுவிக்க வேண்டும், எவ்வாறு பயில வேண்டும், இசைக்குத்தர வேண்டிய மதிப்பு என்ன? மரியாதை என்ன? இன்னமும் என்னென்ன வகையிலே தொன்றுதொட்டு பன்னெடுங்காலமாக வளர்ந்து வருகின்ற இந்த இசைக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்பது போன்ற கருத்தரங்குகள் அமைய வேண்டும், நடைபெற வேண்டுமேயல்லாமல், ஏன் தமிழ் இசையை அனைவரும் போற்ற வேண்டுமென்பதற்கு உரிய காரண, காரிய விளக்கங்களை அளித்துக் கொண்டிருப்பது தேவையற்ற ஒன்றாக எதிர் காலத்திலாவது மாறினால்தான் நம்முடைய காலத்திலே நாம் தமிழை உயரத்தில் உட்கார வைத்தோம் என்ற பெருமைக்கு உரியவர்களாக ஆவோம்

உலகத்திலே உள்ள மொழிகளிலே மூத்த மொழி தமிழ் மொழி. இன்னும் சொல்லப் போனால் நாம் நம்முடைய தாய் மொழியை மொழி என்று அழைக்கிறோம். மொழி என்று அழைப்பதிலேயே பெயர்ச் சொல்லும் இருக்கின்றது. வினைச் சொல்லும் இருக்கின்றது.

மொழி - பாஷை என்கின்ற அந்த வடமொழிச் சொல்லுக்கு தமிழில் ''மொழி'', ''லாங்குவேஜ்'' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் நாம் மொழி என்கிறோம். ஆனால் மொழி என்பதிலேயே வினைச் சொல்லும் அடங்கியிருக்கின்றது. ஒருவனைப் பார்த்து ''நீ மொழிந்ததை மீண்டும் மொழி'' என்று சொன்னால் அங்கே வினைச்சொல். ஆனால் அப்படி ஆங்கிலத்திலே உச்சரிக்க முடியுமா என்றால் முடியாது. அவன் மொழி கிறான் என்று சொல்லலாம். He languages என்று சொல்ல முடியாது. அவன் பாஷிக்கிறான் என்று கூற முடியாது. தமிழிலேதான் மொழி என்ற அந்தச் சொல்லைப் பெயர்ச் சொல்லாகவும் பயன்படுத்தலாம், வினைச் சொல்லாகவும் பயன்படுத்த லாம். அத்தகைய உயர்வைப் பெற்ற மொழி நம்முடைய மொழி - தமிழ் மொழி.

தமிழ் என்பதிலேயே முன்னோர்கள் இதற்குப்பெயரிட்ட அந்தக் காலத்திலேயே எவ்வளவு அழகாக இனங்களை ஒன்று சேர்த்திருக் கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து நாம் மகிழ்ச்சி அடைய முடியும். தமிழ் - த, மி, ழ், தமிழில் மூன்று இனங்கள் உண்டு. வல்லினம், மெல்லினம், இடையினம். க,ச,ட,த, ப,ற - வல்லினம், அதிலே உள்ள ''த'' தமிழின் முதல் எழுத்தாக, வல்லின எழுத்தாக ஒலிக்கின்றது. ங,ஞ,ண,ந, ம,ன - மெல்லினம். அதிலே உள்ள ''ம'' என்ற எழுத்து, ''மி'' ஆகி, அந்த மெல்லினம் தமிழ் என்பதிலே இரண்டாவது எழுத்தாக ஒலிக்கின் றது. ய,ர,ல,வ,ழ,ள - இடையினம். அதிலே உள்ள ''ழ'' என்ற எழுத்து ''ழ்'' ஆகி, அந்த இடையினம் தமிழ் என்பதிலே மூன்றாவது எழுத்தாக அமைந்து, வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று இனங் களும் சேர்ந்த மொழியாக ''தமிழ்'' என்று பெயர் வைக்கப்பட்டிருக் கின்றது. இப்படி மூன்று இனத்தையும் சேர்த்து ஒரு மொழிக்கு உரிய பெய ராக உருவாக்கியுள்ள இந்தப் பெருமை வேறு மொழிக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. ''நீ என்ன, எல்லா மொழி களும் கற்றவனா?'' என்று நீங்கள் என்னைக் கேட்கக் கூடும். பாரதியாரே கூட ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்றார். எனவே நான் பாரதியாரைத் துணைக்கு அழைத்து - நான் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணேன் என்று சொல்ல வேண்டிய அளவிற்கு மொழிக்குரிய இலக்கண அடிப்படையிலே உள்ள இந்த இனங் களைக் கூட இணைப்பதிலே ஒரு பெரும் திறமைகாட்டி மொழிப் பெயரை அன்றைக்கு உருவாக்கியிருக் கின்றார்கள் எனக் கூறுகிறேன்.

## மத்திய அமைச்சரவையில் புதிய இணை அமைச்சர்

மத்திய அமைச்சரவையில் அறி வியல் அறிஞர் டாக்டர் எம்.ஜி.கே. மேனன் அவர்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறை இணை அமைச்சராக 18-12-89 அன்று பொறுப்பு ஏற்றார். இவரு டன் சேர்த்து மத்திய இணை அமைச் சர்கள் எண்ணிக்கை மூன்றாகிறது.

பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் கவனித்து வரும் கடல் அபிவிருத்தி, மின் அணு, அணு சக்தி, வானவியல் ஆகிய துறை களில் திரு. எம்.ஜி.கே. மேனன் அவர்கள் பிரதமருக்குத் துணையாக இருப்பார்.

அந்த மொழியில் இசை இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வந்தவர்கள் தமிழ்நாட்டிலே உள்ள வர்கள் மாத்திரமல்ல. ஒவ்வொரு மாநிலத்திலும் இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள ஒவ்வொரு மாநிலத்தவர்களும் அவரவர்களுடைய தாய்மொழியிலே இசை இருக்க வேண்டுமென்று விரும்புவது தவறல்ல. அதனால்தான் வங்கத்துச் சிங்கக் கவிஞர் தாகூர் அழகாகச் சொன்னார். தன்னுடைய தாய்மொழியிலே இசைக் காமல், வேறு ஒரு மொழியின் இசையை அனுபவிப்பது எப்படி இருக் கிறது என்றால் - மனைவியிடத்தில் வக்கீல் வைத்துப் பேசுவதைப் போல் இருக்கின்றது என்று சொன்னார். நான் இதற்காக வேறு மொழிப் பாடல்களே கூடாது என்று வெறுப் பவனும் அல்ல! மறுப்பவனும் அல்ல. எல்லா மொழிகளிலும் பாடக் கூடிய ஆற்றல் பெற்ற இசைப் பேரரசி எம்.எஸ். அவர்கள் இங்கே அமர்ந் திருக்கின்றார்கள். என்ன பாடு கிறார்கள் என்பதை அந்தச் சொல் சுத்தம் என்பார்களே - அந்தச் சொல் சுத்தத்தோடு பாடக் கூடியவர்கள் எம்.எஸ். அவர்கள், அவர்களைப் போன்ற சிலர்தான் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்றார்கள்.

தமிழிலே பாட வேண்டும் என்று நாம் விரும்புவதற்குக் காரணம் - என்ன பாடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான். நான் வேறொரு நிகழ்ச்சியிலே குறிப்பிட்டதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இசைக்கு மொழி இல்லை. ஆனால் மொழிக்கு இசை தேவை. தமிழுக்குத் தமிழிசை தேவை! இதுதான் நம் முடைய உள்ளத்திலே பதிய வேண்டிய அழுத்தமான கருத்து. அந்த இசையை பன்னெடுங்காலத்திற்கு முன்பு, சங்க' காலத்திலேயே கூட புலவர்கள் நமக்குத் தந்திருக்கின்றார்கள். சங்க காலத் திற்குப்பிற்பட்டபல்வேறு காலங்களில், சங்கத்தின் தலைவர் வரவேற்புரை ஆற்றுகின்ற நேரத்தில் குறிப்பிட் டார்களே - பிற்காலத்திலே வந்த பாடல்களும் கூட - தேவாரம் ஆனா லும், திருவாசகம் ஆனாலும், இராம லிங்க அடிகளாருடைய பாடல்கள் ஆனாலும், திருப்புகழ் ஆனாலும், அவைகள் எல்லாம் அருமையான தமிழ்க் கருவூலங்களாக, தமிழ்ச் சோலைகளாக, தமிழ் இலக்கியப் பெட்டகங்களாக அதே நேரத்தில் இசையோடு கலந்த அமுதங்களாக நமக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. எனவே அவைகளைப் பரப்ப வேண் டிய பெரும் கடமை நமக்கு உண்டு என்பதை இந்த நல்லதொரு விழா விலே நான் நினைவுபடுத்த வேண்டிய வனாக இருக்கின்றேன்.

இசை என்கின்ற இந்தப் பெயரே கூட தமிழன் எவ்வளவு அழகாக இதற்குச் சூட்டியிருக்கிறான் என்பதை எண்ணியெண்ணி நாம் மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம். ஈதல் இசைபட வாழ்தல் என்று வள்ளுவர் குறிப்பிடும்போதுஇசையைப் புகழ் எனகின்ற பொருளிலே குறிப் பிடுகின்றார்.

இதற்கு இசை என்ற பெயரைச் சூட்டியவர்கள் ஒரு கச்சேரியில் - ஒரு இசை நிகழ்ச்சியில் பாடலோடு பக்க வாத்தியக்காரர்கள் இசைந்து போனால் தான் - ஒரு பக்கவாத்தியக்காரரோடு இன்னொரு பக்கவாத்தியக்காரர் இசைந்து போனால்தான் - ஏன் சுருதி கூட்டுபவர் உட்பட அனைவரும் ஒரு வரோடு ஒருவர் இசைந்து போனால் தான் அது இசை நிகழ்ச்சி. எனவே எல்லோரும் இசைந்து நடத்துகின்ற நிகழ்ச்சி இசை நிகழ்ச்சி. எனவேதான் அது இசை என்று சொல்லப்படு

கின்றது என்று சொன்னால் அது முற்றிலும் பொருத்தமான ஒன்றாகும்.

அப்படிப்பட்ட அந்த இசை தமிழில் தனிப் பெருமையோடு விளங்க வேண்டும் என்பதற்காக அந்தக் காலந்தொட்டு பாடுபட்டவர்கள் இங்கே பலர் வீற்றிருக்கின்றார்கள். அதில் முக்கியமாக என்னுடைய அன்பிற்குரிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் தமிழுக்காக, தமிழின் மேன்மைக்காக, குறிப்பாக, தமிழ் இசை மூலமாக நல்ல பல கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்ட அந்தக் கடந்த கால நிகழ்ச்சிகளை எல்லாம் நான் எண்ணிப் பார்த்து அத்தகைய பெரியவர்களுக்கு சான்றோர்களுக்கெல்லாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்த இனிய விழாவிலே 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டம் பெறவிருப்பவர் நம்முடைய பேரன்பிற்குரிய குன்னக்குடி வைத்திய நாதன் அவர்கள். அவருக்கு இசைப் பேரறிஞர் பட்டத்தை நான் வழங்குவேன் என்று அழைப்பிதழிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்பே பல்வேறு விருதுகளை அவர்களுக்கு வழங்கியிருக்கின்றேன். அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு இசைப் பேரறிஞர் விருதையும் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக வழங்கவிருக்கிறேன். அதற்காக நான் பெருமை கொள்கிறேன்.

சங்கத் தலைவர் கோகுலகிருஷ்ணன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல அவருடைய வாத்தியக் கருவி இருக்கிறதே - அதை எல்லோரும் குறிப்பாகச்சொல்லும்போது ''வாசிப்பார்கள்'' என்றுதான் சொல்வார்கள். பிடில் வாசிப்பார் என்றுதான் கூறுவார்கள். ஆனால் நம்முடைய குன்னக்குடி வைத்திய நாதனைப் பொறுத்தவரையில் அவர் வாசிப்பதில்லை. பிடிலைப் பேச வைக்கின்ற ஒரு அற்புதத்தை, செய்து காட்டிக் கொண்டிருப்பவர். அதிலே பல்வேறு யுக்திகளை எல்லாம் கையாண்டு புகழ் பெற்றவர். கோகுல் சொன்னார் - கவிஞர் கண்ணதாசனுக்கு ஏற்பட்ட இரத்தக் கொதிப்பு கூட இவருடைய இசையின் காரணமாக அடங்கிற்று என்று சொன்னார். அதையெல்லாம் நான் நம்பத் தயாராக இல்லை. ஒரு வேளை கோகுல் அவர்கள் இப்போது அப்படி தன்னை மாற்றிக் கொண்டிருக்கலாம். இளமைக் காலத்திலே அவர் அப்படி இருந்தவரல்ல. பிடில் வாசித்து இரத்தக் கொதிப்பை அடக்கி விடலாம் என்றால், பிறகு மருத்துவமனைகளே தேவையில்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் கூட தேவையில்லை. ஆனால் நான் அந்த உணர்வுகளைக் குறைத்து மதிப்பிடவில்லை. இரத்தக் கொதிப்பு - இது போன்ற இனிமையான இசையைக் கேட்கின்ற நேரத்தில் இன்பம் பொங்குகின்ற அத்தகைய ஒரு அரிய சுவையைச் செவிகளிலே கேட்டு, சிந்தை மகிழ்கின்ற நேரத்தில் ஒரு ஆறுதலின் காரணமாக இரத்தக் கொதிப்பு அடங்கக்கூடும். இரத்தக் கொதிப்பு என்பது உணர்வுகளின் காரணமாக ஏற்படக் கூடியது. அதிலும் என்னுடைய பழைய நண்பர் கண்ணதாசன் அவர்களுக்கு அடிக்கடி கோபம் வரும், உணர்ச்சி வயப்படக் கூடியவர், அதன் காரணமாக அந்த இசையின் மூலமாக அவர் அதிலே தணிந்திருக்கக் கூடும். பிடிலின் மூலமாக மழையை குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் வரவழைத்தார் என்றெல்லாம் செய்திகள் வெளியிடப்பட்டது உண்டு. நான் அப்போது அதைக் கேலியாகச் சொல்லவில்லை. மழை வந்ததோ அல்லவோ? குன்னக்குடி அவர்களின் வயலின் மூலமாக இசை மழை பொழிந்தது என்பதை நான் ஒத்துக் கொள்ளக் கூடியவன். அத்தகைய இசை மழைபொழியக் கூடிய குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியிலே இசைப் பேரறிஞர் பட்டம் தருவதிலே நான் பெருமகிழ்ச்சி அடைந்து, அவரை வாழ்த்தி, பாராட்டி மகிழ்கிறேன்.

**—21.12.89 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ் இசைச்சங்கத்தின் 47-வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.**

## அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் பரிசு

அரசு அலுவலர்களுக்குக் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் பொங்கல் பரிசாக ரூ. 400 வழங்கப்படும்.

தற்போது, தினக்கூலி அடிப்படையில் இருக்கக் கூடிய அலுவலர்களுக்குக் கடந்த ஆண்டு பொங்கல் பரிசாக ரூ. 250 தான் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் 5 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என்றும், ஆண்டொன்றுக்கு 240 நாட்கள் பணியாற்றி இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை இருந்தது. இப்போது அந்த நிபந்தனை மாற்றப்படுகிறது. கடந்த ஆண்டில் குறைந்தபட்சம் அவர்கள் 240 நாட்கள் பணியாற்றியிருந்தாலே இந்த பொங்கல் பரிசுத்தொகை வழங்கப்படும்.

இதன் மூலம் சுமார் $11\frac{1}{2}$ இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன் பெறுவர். இதனால் அரசுக்கு ரூ. 44 கோடி செலவாகும்.

இந்த அரசு ஏற்கெனவே அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறது. எனவே, இதில் அவர்கள் மனநிறைவு பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**-முதல்வர் கலைஞர்**

**(28-12-89 செய்தியாளர் கூட்ட அறிவிப்பிலிருந்து)**

**ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் இலவசக் கல்வித் திட்டம்:**

# "ஏழை எளியோர் படித்துப் பயன்பெறும் திட்டம்"



செல்வி காமாட்சி

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் படிப்புதவித் திட்டம் மூலம் மாணவியர் பலரும் பயன்பெற்று வருகிறார்கள். ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பட்டப் படிப்பில் ஊக்கம் உள்ளவர்களாக மாற இத்திட்டம் எப்படியெல்லாம் பயனளிக்கிறது என்பதைப் பயன் பெறுவோரிடமே கேட்டறிய முற்பட்டோம்.

அம் முயற்சி தொடர்பான சந்திப்பில், நமக்குக் கிடைத்த செய்திகளின் தொகுப்பே இந்தக் கட்டுரை:



செல்வி மகாலட்சுமி

காஞ்சிபுரம், பச்சையப்பன் மகளிர் கல்லூரியில், முதலாம் ஆண்டு-பொருளாதாரம் படிக்கும் செல்வி மகாலட்சுமியை இத்திட்டம் பற்றிக் கேட்டபோது கூறினார்-

"எங்கள் குடும்பம் பெரிசு. பெற்றோர் தவிர சகோதர சகோதரிகளாகிய நாங்கள் 5 ஆண்களும், 2 பெண்களுமாக 7 பேர்கள். அப்பாவிற்கு நிரந்தர வேலை கிடையாது. நான்தான் கடைசிப் பெண். 3 அண்ணன்மார்களுக்குத் திருமணமாகி அவர்கள் தனிக்குடித்தனம் போய் விட்டார்கள். நான் முற்பட்ட - பிராமணர் வகுப்பைச் சேர்ந்தவள். சாதி, மதம் - முற்பட்ட பிற்பட்ட வகுப்பு என்றெல்லாம் பார்க்காமல், பொருளாதார அடிப்படையை வைத்து தமிழக அரசின் கல்லூரிக் கல்விக் கட்டணச் சலுகை மூலம் ஆண்டுக்கு ரூ.330 கட்ட வேண்டிய பெரிய சுமை என் தந்தைக்கு நீங்கியது. என் குடும்பச் சூழ்நிலையில் - ஒரு வேளை இந்தத் திட்டம் வராம இருந்திருந்தா நான் தொடர்ந்து படித்திருப்பேனா என்பது சந்தேகம்தான்! ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்திற்கும், அதன் மூலம் என் போன்ற ஏழை எளிய பெண்களெல்லாம் படித்துப் பயன்பெற உதவிடும் தமிழக அரசிற்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன் நான்" என்றார் செல்வி மகாலட்சுமி.

## பயன் அடைந்தோர் பகர்வன

வணிகவியல் பட்டப் படிப்பு மாணவியான செல்வி காமாட்சியைச் சந்தித்து இதுபற்றிக் கேட்ட போது சொன்னார்:

"என் தந்தை காலமாகி விட்டார் - நெசவு வேலையே எங்கள் குடும்பத் தொழில் - அம்மாதான் சிரமப்பட்டு குடும்பத்தைக்காப்பாத்திட்டு வராங்க - மேலும் மேலும் படிக்கணும்னு எனக்கு மிகவும் ஆர்வம் இருக்கிறது. ஆனால் படிக்கப் பணமில்லையே, எப்படி படிப்போம் என்று கல்லூரியில் சேரும் போது நான் வருத்தப்பட்டேன். ஆனா 376 ரூபாய் கட்டணச் சலுகை மூலம், ஓரளவிற்கு எங்கக் குடும்பச் சுமை நீங்கியது - பணம் இல்லைன்னா படிப்பும் இல்லை என்ற நிலைமை மாறிவிட்டது. இத்திட்டம் என் போன்ற ஏழைக் குடும்பத்துப் பெண்கள் படிப்புக்குக் கை கொடுக்கும் திட்டமாக உள்ளது."

செல்வி அகிலா கூறுகிறார்:

"என் அப்பாவுக்கு நானும் என் அண்ணனும் ஆகிய இரண்டு பேர் தான் - இருவரும் கல்லூரியில் படிக்கிறோம். அப்பாவிற்கு மூன்று சக்கரச் சைக்கிள் மூலம் எண்ணெய்

செல்வி அகிலா



விற்கிற வேலை - அவருக்கும் வயதாகிவிட்டது. வருகிற வருமானத்தில் நாங்கள் இரண்டு பேரும் படிக்க முடியவில்லை - இருந்தாலும் இந்தத் திட்டம் மூலம், 376 ரூபாய் கட்டணச் சலுகை இருப்பதால்தான், நான் தொடர்ந்து கல்லூரியில் படிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இத்திட்டத்திற்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்''



★ **அறிவு வளர்ச்சி வேண்டும்; கல்வி வேண்டும்; ஆராய்ச்சி வேண்டும்; கண்ணியமான தொழில் வேண்டும்; சமத்துவம் வேண்டும்; ஒற்றுமை வேண்டும்; தன் முயற்சி வேண்டும்; உண்மை உணர்வு வேண்டும்; ஒருவரையொருவர் ஏமாற்றிப் பிழைக்காமலிருக்க வேண்டும்; சோம்பேறிகள் இருக்கக் கூடாது; அடிமைகள் இருக்கக் கூடாது; தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக்கூடாதவர்கள் முதலியவர்கள் இருக்கக்கூடாது. இன்னும் இதுபோன்ற எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட வேண்டும்.**

ஜவுளிக்கடை குமாஸ்தாவாகப் பணியாற்றும் திரு. அருகீர்த்தியின் மகள் செல்வி சத்திய பிரபா சொன்னார்:

''அண்ணனும் நானும் படிப்பவர்கள் - ஜெயின் சமூகம் என்பதால் முற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றும், அரசு சலுகை எதுவும் கிடைக்காது என்றும் சிலர்



**செல்வி சத்திய பிரபா**

சொன்னார்கள். ஆனால், குடும்ப வருமான அடிப்படையில் கல்விக் கட்டணச் சலுகை கிடைத்தது. அதனால் ஓரளவிற்கு என் அப்பாவிற்கு நிம்மதி ஏற்பட்டது. தொடர்ந்து படித்து, ஒரு பட்டதாரியாக ஆக முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கும் உள்ளது.''

செல்வி காமக்கோட்டி வணிகவியல் முதலாமாண்டு படிக்கும் மாணவி. அவர் இத்திட்டம் பற்றிக் கூறுகையில், ''தொடர்ந்து சரிவர மழை பெய்யவில்லை; வறட்சி; அதனால் அப்பாவும் சரியா விவசாயம் செய்ய முடியலை. வீட்டிற்கும் வருமானம் போதாத நிலை. பண வசதி இல்லையே - என்னைக் கல்லூரியில் படிக்க வைப்பார்களா? என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஆனால் இப்ப தமிழ்நாடு அரசு மூலம் கிடைக்கிற கல்விக் கட்டணச் சலுகையால் ஆண்டுக்கு 376 ரூபாய் சலுகை கிடைக்கிறது. என் அப்பாவிற்குத் தெம்பா இருக்கு. நானும் நல்லா படிக்கலானேன். எப்படியும் நான் பட்டதாரியா ஆகிவிடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது.''

இத்திட்டம் மாணவர்களுக்கு எப்படிப் பயனளிக்கிறது என்று காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி. மும்தாஜ் பாலகிருஷ்ணன் அவர்களிடம் கேட்ட போது-

''முற்பட்ட - பிற்பட்ட - தாழ்ந்த வகுப்பு என்ற சாதி மதப் பாகுபாடு இல்லாமல், பொருளாதார அடிப்படையில், கல்விச் சலுகை பெற ஏழை மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய நல்ல திட்டமாகும் இது. படிப்பு எல்லோருக்கும் பயன்படக் கூடியது. ஏழ்மை என்பதால் கல்வி தடைப்படக்கூடாது என்று இந்த நல்ல திட்டத்தைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.

''ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்தின் மூலம், எங்கள் கல்லூரியில் 26 மாணவிகள் ரூ.9,308 அளவிற்கு ஓராண்டிற்குக் கல்விக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இதற்கான இழப்புத் தொகையினைக் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்திலிருந்து நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

1989-90-ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது தமிழக அரசு என்று இயக்குநரக அறிக்கை மூலம் தெரிய வருகிறது. உண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள இத்திட்டம் - தொடர்ந்து படிப்போமா, அல்லது இடையில் நிறுத்தி விடுவோமா, என்ற ஐயமில்லாமல் ஏழை மாணவிகள் உற்சாகத்துடன் படிக்க வகை செய்யக்கூடிய நல்ல திட்டமாகும்'' என்றார் மகிழ்ச்சியுடன்.

**-எம். கலைமணி**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கை - அண்ணா மாவட்டம்

# அமைதிப் புரட்சியின்

# அழியாச் சின்னம்



பேராசிரியர், ந. இராமநாதன்
முதல்வர்,
பெரியார் சிந்தனை அஞ்சல்வழிக் கல்லூரி.

அமைதியையும் புரட்சியையும் நாம் தொடர்மொழியாகச் சேர்த்துப் பேசலாம், அல்லது எழுதலாம். ஆனால் நடைமுறை வாழ்வில் இரண்டும் இயைதல் என்பது இல்லை. அமைதியுள்ள இடத்தில் புரட்சி இருக்காது. புரட்சியுள்ள இடத்தில் அமைதியும் இருக்காது. வியப்பிலும் வியப்பாக இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்துக்கொண்டு தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த மாபெரும் கருத்துப் புரட்சியை நடத்திய சிந்தனையாளரை இத்தமிழுலகம் கண்டது. அவர்தான் தந்தை பெரியார்!

சிந்தனைகளில் புரட்சி-எழுத்துகளில் புரட்சி-மேடைகளில் முழங்குவதில் புரட்சி. ஆனால் செயல்களில், நடைமுறைகளில் நடுக்கடலன்ன அமைதி. நடுக்கடலன்ன சிந்தனைகளில் ஆழம். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றபடி எப்போதும், எவ்விடத்தும், எத்தகைய சிக்கலிலும் உயர்வையே உள்ளும் உள்ளம். கள்ளம் கபடமற்ற வெள்ளை மனம். ஆனால் எவராலும் ஏமாற்ற முடியாத தெளிந்த மதி. எவரையும் ஏமாற்ற விரும்பாத மனத் தூய்மை. விண்மீதில் அண்ணாந்த குன்றம் போல எங்கும் யாவரும் அறிந்து கொள்ளும் தோற்றம். எத்தகைய மனிதராலும் அசைக்க முடியாத மலையின் அழுத்தம் போன்று, தாம் கொண்ட கொள்கையில் அழுத்தம். நீர் மேல் எழுத்து போல இல்லாமல் நின்ற சொல்லராய், அடங்கி ஒடுங்கி முடங்கி முக்காடிட்டுக் கொண்டு மூலையில் கிடக்காமல் காட்டில் உலாவரும் அரிமா போல, மக்கள் வாழும் இடமெல்லாம் சென்று சென்று கொள்கை முழக்கமிட்ட அரிமாத் திறம். இந்த இயல்புகளின் வடிவமாகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார்.

படித்ததையும் கேட்டதையும் அப்படியே திருப்பிச் சொல்லியும், அப்படியே திருப்பி எழுதியும் வருவதே புலமை அல்லது அறிவு என்றும் எண்ணியும் பேசியும் வந்த உலக நடைமுறையை மாற்றிப் படித்ததையும் கேட்டதையும் சிந்தித்துப் பார்த்துப் பின்னர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ணற்ற மக்களைச் சிந்திக்கத் தூண்டியவர் பெரியார். "இவ்வாறு தாம் சிந்தித்ததால் பல உண்மைகள் தமக்குத் தெரிய வந்தன. தம்மைப் போலவே மற்றவர்களும் சிந்தித்தால் அவர்கட்கும் உண்மைகள் புரியும்" என்று மனமார நம்பித்தான் அவர் தம் வாழ்நாளெல்லாம் பேசினார்; எழுதினார்.

''சிந்திக்காமல் கண்ணை மூடிக் கொண்டு அப்படியே நம்பிவிடாதே. அப்படி நம்புவது மந்தை மனப்பான்மை. ஆட்டு மந்தைதான் அப்படிச் செய்யும். செம்மறி ஆடுகள் கூட்டமாகப் போகும்போது ஏதோ ஒன்றைக் கண்டு ஒரு ஆடு தாண்டிச் செல்லுமானால் அவ்வளவு ஆடுகளும் அப்படியே தாண்டித் தாண்டித் தான் செல்லும். அங்கே என்ன இருக்கின்றது? ஏன் தாண்ட வேண்டும் என்று எண்ணிப் பார்க்காது, எல்லாம் தாண்டியே செல்லும். இந்த மனப்பான்மை மனிதருக்கு ஆகாது. யாராக இருந்தாலும் எவர் சொல்லியதாக இருந்தாலும் அவைகளை நடுவு நிலையில் இருந்து சிந்தித்துப் பார்க்க மக்களைத் தூண்டியவர் பெரியார்.

''நான் ஒரு சுதந்திர மனிதன். எனக்குச் சுதந்திர நினைப்புண்டு. சுதந்திரமான அறிவுண்டு. சுதந்திரமான ஆராய்ச்சியுண்டு. சுதந்திரமான அனுபவம் உண்டு. இவைகளைக் கொண்டு என்னுள்ளத்தில் பட்டதைச் சொல்லுகின்றேன். நீயும் உன்னுடைய சுதந்திரமான நினைப்பு அறிவு-ஆராய்ச்சி- அனுபவம் இவைகளைக் கொண்டு சிந்தித்துப் பார்த்து ஏற்றுக் கொள்ள முடியுமானால் ஏற்றுக் கொள். ஏற்றுக் கொள்ள முடியவில்லையானால் தள்ளி விடு, என்ற நிபந்தனையின் மீதுதான் நான் எதையும் சொல்லுகின்றேன். நான் சொல்லுகின்ற எதையும் நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை.''

இவ்வாறு பேசியும் எழுதியும்தான் அமைதிப்புரட்சியைத்தென்னகத்தில் தமிழகத்தில் விளைவித்தார் பெரியார்.

தொலைபேசி: 3277

புதுவகை இனிப்பு, காரங்களுக்கும்
உயர்தர காபி, சாப்பாடு, டிபன் வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

# "ஸ்ரீசக்தி பாலா"

சைவ உணவகம்

(புது பஸ் ஸ்டாண்டு அருகில்)

திண்டுக்கல்

குறிப்பு: திருமணங்கள், டீ பார்ட்டி முதலியவைகளுக்கு ஆர்டர்கள் சிறந்த முறையில், குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.

தொலைபேசி: 6825

சிறந்த சிற்றுண்டி
சுவையான சாப்பாட்டிற்கு
சிறந்த இடம்

# "ஹோட்டல் சங்கீத்"

புது பஸ் ஸ்டாண்டு ரோடு

திண்டுக்கல்

**குறிப்பு:** திருமணம், டீ பார்ட்டி மற்றும் டின்னர் ஆர்டர்கள் குறித்த நேரத்தில் நல்ல முறையில் சப்ளை செய்யப்படும்.

மாயூரம்

# வேதநாயகனார்

-டாக்டர் மா. சேசையா



**முதல் தமிழ் நாவலை எழுதிய விற்பன்னர் - நீதிபதி மாயூரம் வேதநாயகனார் அவர்களின் நூறாவது நினைவு ஆண்டையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

மாயூரம் வேதநாயகனார் 11-10-1826-இல் திருச்சியை அடுத்த குளத்தூரில் நல்ல செல்வக் குடும்பத்தில் பிறந்தார். பால பருவத்திலேயே பாக்கள் இயற்றும் திறம் பெற்றிருந்தார். அதோடு தியாகுப் பிள்ளை என்ற அரசு மொழி பெயர்ப்பு அதிகாரியிடம் ஆங்கிலமும் கற்றுப் பெரும் புலமை பெற்றார்.

முதன்முதலாக 1876-ஆம் ஆண்டு தனது 50-ஆவது வயதில் அவர் எழுதிய முதல் புதினத்திற்குப் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்று பெயரிட்டு அதற்கு அவர் அருமையான ஆங்கிலத்தில் அற்புதமான முன்னுரை வழங்கியுள்ளார். அதில் அவர், இந்த முதல் தமிழ் நாவலை ஏன் எழுதினார் என்பதற்குரிய காரணத்தைச் சிறப்பாக விளக்கியுள்ளார்.

இதுபோல, அவர் எழுதிய மற்ற நூல்களுக்கும் ஆங்கிலத்தில் முன்னுரைகள் எழுதியுள்ளார். ஏனென்றால், அவர் ஆங்கிலேயர் ஆட்சி இருந்த காலத்தில் முதல் தமிழ் நீதிபதியாக அரசுப் பணி புரிந்தார். எனவே, ஆங்கிலேய அதிகாரிகளும் தாம் எழுதிய பல நூல்களை- அவற்றின் சாரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் அவ்வாறு செய்தார்.

வேதநாயகனார் ஆங்கில அரசாங்கத்தில் நீதிபதியாக இருந்ததால் ஆங்கிலப் புலமை பெற்றார். ஆனால், ஆங்கில நாகரிகத்தை அவர் ஒருபோதும் பின்பற்றியதில்லை. ஆங்கிலத்தில் அவர் சிறந்த புலமை பெற்றிருந்தாலும் தமிழில் நினைத்தவுடன் கவிதை பாடும் வல்லமை பெற்றிருந்தார்.

தன்னுடைய முப்பத்தோராவது (1857) வயதிலேயே முதல் தமிழ் நீதிபதியாகத் தரங்கம்பாடியில் நியமிக்கப்பட்டார். அப்போது பகலெல்லாம் வழக்குகளை விசாரித்து நேர்மை குன்றாது தீர்ப்பு வழங்கிக் களைத்துப்போன அவர், இரவில் சோர்வையும், அலுப்பையும் பொருட்படுத்தாது, நீதிநூல் என்ற ஒப்பற்ற கவிதை நூலை எழுதி வெளியிட்டார்.

அவர் எழுதிய அந்த நீதிநூலைப் பற்றி வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் ''அறம் பற்றி நீ எழுதியது ஒன்றுதான் நூல்; மற்றதெல்லாம் கிழிந்த துணியில் இருந்து வெளிக்கிளம்பும் வெளிறிய நூலுக்குச் சமம்- கிழிபடத்தின் வெண்ணூல்' என்று சாற்றுக்கவி பாடினார். இதைப்போல வள்ளலார் செய்த உள்ளத்தை உருக்கும் 'அருட்பா' என்ற அந்த அற்புதமான கவிதை நூலுக்கு அரசு அலுவலர் நீதிபதி வேதநாயகர் அற்புதமான சாற்றுக் கவிதை தந்து போற்றினார். வள்ளலாரும், 'சமரச சன்மார்க்கம்' என்ற கொள்கையை உடையவர். நீதிபதி வேதநாயகரும் அதே கொள்கையை உடையவர். எனவேதான் 'சர்வ சமய சமரச கீர்த்தனை' என்ற இசை நூலைத் தமிழில் பாடினார். மற்றவர்களெல்லாம் தெலுங்கில் கீர்த்தனைகள் பாடிக் கொண்டிருந்த போது நம்முடைய வேதநாயகனார் தமிழில் இசை பாடி இசைத் தமிழை வளர்த்தார்.

மொழிபெயர்ப்புத் துறையிலும் அவர் சிறந்து விளங்கினார். அவர் தம் வாழ்க்கையை அரசு ஆவணக் காப்பாளராகத் (Recordkeeper) தொடங்கினார். அதன்பின் திருச்சியிலுள்ள நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக அரசுப் பணியாற்றினார். அப்போது ஆங்கில நீதிபதிகள் அளித்த ஆங்கிலத் தீர்ப்புகளைத் தமிழ்ப்படுத்தினார். பின் அதனைத் தொகுத்து 'சித்தாந்த சங்கிரகம்' (சங்கிரகம்-தொகுப்பு) என்ற தலைப்பில் புத்தகமாக 1862-இல் வெளியிட்டார். ஆங்கில மொழியிலுள்ள பல சட்ட நுணுக்கச் சொற்களுக்குத் தகுந்த தமிழ்ப் பதங்களைத் தன் புலமை நலத்தால் கண்டறிந்து அற்புதமாக மொழிபெயர்த்து மொழிபெயர்ப்புத் துறையினருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறார்.

இந்த 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலின் ஒரே ஒரு பிரதி இன்று ஆவடியில் வாழும் அவருடைய கொள்ளுப் பேரன் வே.ஞா.ச. இருதயநாதன் என்பவரிடம் இருக்கிறது. இந்நூலை வெளியிட்டால் மிகவும் பயனுள்ளதாக அமையும். மற்றொரு கொள்ளுப் பேரன் வே.ஞா.ஆ. ஜான் ஜோசப், பி.ஏ., நமது தலைமைச் செயலகத்திலேயே இணைச் செயலராக இருந்து அண்மையில்தான் ஓய்வு பெற்றார்.

வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற கொள்கை நிலவி வந்தது. தமிழர்களின் சங்க காலத்தில் பானை செய்த குயப்பெண் கவிதை செய்திருக்கிறாள். அவள் பெயர் 'வெண்ணிக் குயத்தியார்'. குற இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் கவிதை பாடியிருக்கிறாள். அவள் பெயர் 'குறமகள் இளவெயினி'. தினைப் புனத்தைக் காவல் காத்த ஒரு பெண் கவிதை பாடியிருக்கிறாள். அவள் பெயர் 'காவற்பெண்டு'. மதுரையில் ஓலைக்கடை

வைத்திருந்த ஒரு பெண் கவிதை பாடினார். இவர் பெயர் 'மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்' என்பது. இப்படியிருந்த தமிழகம் பிற்காலத்தில் பெண்களைக் கல்வி கற்கவிடாமற் செய்தது. இதனைக் கண்டித்து, ஒரு குடும்பம் சிறப்பாக விளங்கவேண்டுமென்றால், அதன் தாய் படித்தவளாக இருந்தால்தான் பிள்ளைகள் படிப்பாளிகளாக இருக்க ஏதுவாகும் என்ற கருத்தை வலியுறுத்தி, 'பெண் கல்வி', 'பெண் மானம்' என்ற இரண்டு நூல்களை உரைநடையில் எழுதினார். அதோடு பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறி கவிதையில் ''பெண் மதி மாலை'' என்ற அழகிய நூலை எழுதினார். 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பெண் கல்வியின் சிறப்பை மட்டுமல்லாது பெண் குலத்தின் பெருமையை உயர்த்தி எழுதிய பெருமை அரசு அலுவலர் நீதிபதி வேதநாயகரையே சாரும்.

அவர் நீதிபதியாக இருந்தபோது எவ்வளவு நேர்மையுள்ள நீதிபதியாக இருந்தார் என்பதற்கு ஒரு நிகழ்ச்சி சான்றாக அமையும். ஒரு வழக்கு, மிகுந்த சிக்கலான வழக்காக இருந்தது. வேதநாயகனார் அதற்கு எப்படித் தீர்ப்பு கூறுவது என்று சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில் வழக்கின் வாதி, அவர் வீட்டிற்கு வந்து 100 ரூபாய் தந்து, வழக்கில் தனக்குச் சார்பாகத் தீர்ப்புச் சொல்லுமாறு கூறிவிட்டுச் சென்றான். வேதநாயகனாரும் 100 ரூபாயை மிகுந்த மகிழ்ச்சியோடு வாங்கி வைத்துக்கொண்டு அவனை அனுப்பி வைத்தார். மறுநாள் நீதிமன்றம் கூடியது. அப்போது நீதிபதியின் ஆசனத்தில் அமர்ந்திருந்த வேதநாயகனார் குழுமியிருந்தோரைப் பார்த்து, ''அன்பர்களே, இந்த வழக்கு மிகவும் சிக்கலானது. இதில் இதற்கு எப்படித் தீர்ப்பு சொல்வது என்று தவித்துக்கொண்டிருந்தேன். ஆனால் நேற்று மாலை இந்த வழக்கின் வாதி என்னிடம் வந்து 100 ரூபாய் தந்து எனக்குத் தீர்ப்பு கூறுகின்ற வேலையை எளிதாக்கி விட்டார். இந்த வழக்கில் வாதிதான் குற்றவாளி. பிரதிவாதியாகிய மற்றவருக்கு இந்த நூறு ரூபாயை அன்பளிப்பாக அளிக்கிறேன்'' என்று நம்முடைய நீதிபதி வேதநாயகனார் கூறிய தீர்ப்புரை கண்டு மக்கள் அவர் மீது எல்லையில்லாத மதிப்பும் மரியாதையும் கொண்டனர்.

## கலைஞர் கருத்துமணிகள்

★ *மலர் என்று சொன்னால் நாம் எவ்வாறு மல்லிகை, ரோஜா என நல்ல மலர்களைக் குறிப்பிடுகிறோமோ, அப்படியே நூல்கள் என்றால், நல்ல நூல்களையே எண்ணிட வேண்டும்.*

★ *ஒவ்வொருவரும் நூல் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது படிக்க வேண்டிய நூல்களைப் படித்திட வேண்டும்.*

இப்படி வாழ்ந்த வேதநாயகனார் குடும்ப வாழ்க்கை மிகுந்த துன்பம் பயப்பதாக இருந்தது. அவர் ஐந்து முறை திருமணம் செய்ய வேண்டியதாயிற்று. காரணம், முதலில் திருமணம் செய்த மனைவி மாண்டு போனார். அதன் பின் மறுமணம். அவரும் சில காலத்தில் இறந்தார். இப்படி ஒருவர் பின் ஒருவராக இறக்க, அவர், ஐந்து முறை திருமணம் செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில், பலமுறை அழுது அரற்றி, அவற்றையெல்லாம் பாக்களாகப் பாடி வைத்துள்ளார் என்றாலும், குடும்பத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு அரசுப் பணியை அற்புதமாக அமைதியாகச் செய்து வந்தார். அத்துடன், தமிழ்த் தொண்டும் செய்து வந்தார். தமிழறிஞர்களைப் போற்றினார்.

தருமபுரம் ஆதீனம் ஒரு சிக்கலான வழக்கில் தவித்தது. அப்போது அதன் ஆஸ்தானக் கவிஞராக இருந்தார் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் (இவர் தான் டாக்டர் உ.வே.சா.வின் ஆசிரியர்.). அவர் வேதநாயகனாரிடம் வந்தார். வந்து உதவி கோரினார். 'அகரக் கம்பர்' என்று பெயர் பெற்ற மாபெரும் தமிழறிஞரான மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தம் இல்லம் நாடி வந்திருக்கிறார் என்பதைக் கேட்டவுடனே, தானே எழுந்து சென்று அவரை வரவேற்று, அன்புமொழி கூறி, அவருடைய சிக்கலைத் தீர்த்து அனுப்பி வைத்தார். அன்றிலிருந்து இருவரும் இணைபிரியா நண்பர்களாயினர். வேதநாயகரைக் கதைத் தலைவனாகக் கொண்டு 'குளத்தூர் வேதநாயகன் ஐந்திணைக் கோவை' (438 பாக்கள் கொண்டது) என்ற ஒரு கவிதை நூலை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடி, வேதநாயகரைக் காவிய நாயகனாக ஆக்கினார். வேதநாயகர் இளம் வயதிலேயே ஒரு மாபெரும் கவிஞரால் பாடப்படும் அளவுக்குப் பேரும் புகழும் பெற்றார் என்றால் அதைவிடச் சிறப்பு வேதநாயகருக்கு வேறு என்ன வேண்டும்?

இறுதியில் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மரணப் படுக்கையில் இருந்தபோது வேதநாயகனார் அவர் இல்லத்திற்கு ஓடோடிச் சென்றார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தலையைத் தன் மடியில் தூக்கி வைத்துக்கொண்டு கண்ணீர் சிந்தினார். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் உயிர் (1-2-1876 அன்று) அவருடைய ஆருயிர் நண்பர் வேதநாயகனாரின் மடியிலேயே பிரிந்தது. அவரது ஆதரவற்ற மகனுக்கு அரசுப் பணியும் வாங்கிக் கொடுத்து ஆதரித்தார் நம் நாயகர்.

இதுபோல, திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்ரமணிய தேசிகர் அவர்களும் நீதிபதி வேதநாயகரின் நெருங்கிய நண்பராவார். இருவரும் அடிக்கடி ஒன்றாக அமர்ந்து உரையாடி மகிழ்வார்கள். ஒரு முறை வேதநாயகனார் திருவாவடுதுறை சென்று சுப்பிரமணிய தேசிகரிடம் பேசி மகிழ்ந்துவிட்டு வீடு வந்து சேர்ந்தார். சேர்ந்தவுடன் இவ்வாறு ஒரு சீட்டுக்கவி எழுதினார். ''ஊர் வந்து சேர்ந்தேன், என் உளம் வந்து சேரக் காணேன்; யார் வந்து சொல்லியும் கேளேன்; அதனை இங்கு அனுப்புவாயே?'' என்று பாடி அனுப்பினார். இன்னும் இரட்சண்ய யாத்திரிகம் எழுதிய ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணப் பிள்ளையையும் தன் இல்லத்திற்கு அழைத்து வந்து அவரது காவியத்தை அரங்கேற்றும்படி செய்தார். அத்தனை அளவுக்கு அவர் அரசுப் பணியாற்றிக் கொண்டும் தமிழகத்திலுள்ள

எல்லாப் பெருமக்களிடமும் நட்பு கொண்டு அவரவருக்குத் தேவை யான உதவிகளையும் செய்து வந்தார்.

இப்படிப்பட்ட நீதிபதி வேத நாயகர்தமிழில் ஆங்கிலத்தில் **உள்ளது** போல் புதினம் இல்லையே என்ற குறையை அறிந்து அதனைப் போக்க முன் வந்தார். எனவே 1876-ஆம் ஆண்டு 'பிரதாப முதலியார் சரித் திரம்' என்ற முதல் தமிழ்ப் புதி னத்தை எழுதினார். முதல் புதினமே புதுமையான வகையில் எழுதப்பட்டு இருப்பது ஒரு தனிச்சிறப்பு ஆகும். கதைத் தலைவனான பிரதாப முதலி யார்ரே கதையைச் சொல்லுவது போல அவர் அதை எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல, வெறும் பொழுது போக்கு இலக்கியமாக மட்டும் அதைப் படைக்காமல் அங்கங்கே அறவுரைகள், அறிவுரைகள் முதலியன வருமாறு எழுதினார். அதோடு படிப்பவர்கள் சுவைத்துப் படிக்க வேண்டும் என்பதற்காக ஏராள மான நகைச்சுவைத் துணுக்குகளை அங்கங்கே தங்கத் தட்டில் வைரக் கற்களைப் பதித்தது போல் பதித்து முதல் புதினத்தை முத்தான புதின மாக எழுதியுள்ளார்.

பிரதாப முதலி சிறு பையனாக இருந்தபோது மற்றொரு பையன் அவனைப் பார்த்து ஒரு சவால் விடுவான், "நான் கண்ணை மூடிக் கொண்டு செய்யும் வித்தையை, நீ கண்ணைத் திறந்துகொண்டு செய்ய முடியுமா?" என்று கேட்பான். உடனே பிரதாப முதலி, "ப்பூ, இதென்ன பிரமாதம், எங்கே செய் பார்க்கலாம்" என்பான். உடனே மற்ற நண்பன் மண் தரையில் மல் லாந்து படுத்துக்கொண்டு தன் கண்களை மூடிக்கொண்டு மண்ணை அள்ளிப் போடுவான். பின்னர் பிரதாப முதலியைப் பார்த்து, "எங்கே இதனை இப்போது நீ கண்ணைத் திறந்துகொண்டு செய் பார்க்கலாம்?" என்பான். பிரதாப முதலி பேந்தப் பேந்த விழிப்பான். இப்படி எத்தனையோ நகைச்சுவைத் துணுக்குகள், சொந்த சிந்தனையில் துள்ளி வந்த சிரிப்பு வெடிகள், ஏராளம் ஏராளம்.

நம் முதல் நாவலாசிரியர் தன் நாவலில் வரும் பாத்திரப் படைப் பில், மக்கள் எப்படி இருக் கிறார்கள் என்று சித்திரிக்காமல், மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற கொள்கைப்படி படைத் துள்ளார். ஆம்! அவர் யதார்த்த நாவல் எழுதவில்லை. மாறாக இலட்சிய நாவல் எழுதினார். எனவேதான், "In writing this story, I have not followed the example of those novelists who depict human nature as it is, not as it ought to be, and who thus exhibit bad specimens of humanity which are often mistaken by the young and inexperienced for objects of imitation" என்று தன் ஆங்கில முன்னுரையில் அழகாக இலட்சிய நோக்குடன் கூறுகிறார். எனவே தான் நம் பேரன்புக்கும் பெருமதிப் பிற்கும் உரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், "பொழுதுபோக்குடன் பயனும் தந்து சுவையும் தந்த புத்தகங் களிலேயே பிரதாப முதலியார் சரித் திரத்தைக் குறிப்பிடுவேன். என் உள்ளத்தைக் கவர்ந்த ஏடுகளில் அது ஒன்று" என்று அற்புதமாகக் கூறி யுள்ளார்.

இன்றைய தமிழகத்தில் புதினம் இல்லையென்றால் பத்திரி கையே இல்லை. தொடர் நாவல், வார நாவல், மாத நாவல், குறு நாவல், சிறு நாவல், சரித்திர நாவல், மர்ம நாவல், துப்பறியும் நாவல், சமூக நாவல், நகைச்சுவை நாவல் என்று எப்படி எப்படியோ பெயரிட்டு நாவல்களை எழுதி 'நாடு முழுவதும் நாவலுக்கு அடிமை' என்ற ஒரு சூழ்நிலை இன்று உருவாகி யுள்ளதென்றால் அதற்கு வித்திட்ட பெருமை வேதநாயகனாரையே சாரும்.

நீதிபதி வேதநாயகனார் பிரதாப முதலியார் சரித்திரத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. எட்டாண்டு கழித்து 1887-இல் 'சுகுண சுந்தரி' என்ற மற்றோர் புதினத்தையும் எழுதினார். இறுதியில் 21-7-1889-ஆம் நாளில் தம் 63-ஆம் வயதில் உயிர் நீத்தார். எனவே இந்த ஆண்டு அவர் மறைந்து 100 ஆண்டுகள் நிறைவு பெறுவதைக் குறிக்கின்ற ஆண்டு.

அவரது கல்லறை இன்றும் மயிலாடுதுறையில் (மாயூரம்) உள்ளது. அரசு அலுவலராக இருந்துகொண்டு தீர்ப்புகளை மொழிபெயர்த்து, அறநூல் செய்து, முதல் புதினம் எழுதி, தமிழில் முதலில் இசை பாடி, பெண் கல்வி பேசி, ஓய்வு பெற்றபின் கூட மாயூரத்தில் நகரமன்றத் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமி ழுக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் அயராது உழைத்த அந்த நல்லவர் விற்பன்னர் வேதநாயகனாருடைய நூற்றாண்டு நினைவு ஆண்டாகிய இந்த ஆண்டில் நம்முடைய அஞ் சலியை அவருக்குச் செலுத்திக் கொள் வோமாக!

## குடும்ப நலத்திட்டத்தில் சாதனை

இந்தியாவில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரையில் மொத்தம் 13.46 இலட்சம் அறுவைச் சிகிச்சைகளும், 18.85 இலட்சம் கருத்தடை வளையம் பொருத்துவதும் நடைபெற்றுள்ளன. கருத்தடைச் சாதனம் பயன்படுத்துவோர் எண் ணிக்கை 96.49 இலட்சமாகவும், கருத்தடை மாத் திரைகளைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 15.98 இலட்சமாகவும் பதிவாகியுள்ளது.

கருவுற்ற 71.01 இலட்சம் தாய்மார்களுக்குத் தட்டம்மைத் தடுப்பூசியும், 75.99 இலட்சம் குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசியும் போடப்பட்டு உள்ளன.

சமூக விற்பனைத் திட்டத்தின் கீழ் நாடெங் கிலும் நிரோத் விற்பனை 99.14 மில்லியனை எட்டியுள்ளது. கருத்தடை மாத்திரைகள் விற்பனை 19.52 இலட்சம்.

# பால் வளம் பெருக்குவோம்



அ. நாகராஜன், இ.ஆ.ப.,
ஆணையர்,
பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை,
சென்னை.

தமிழகத்தின் பால் வளத்துறை 1958-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதற்கு முன் பால் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் பிற சங்கங்களோடு பதிவாளர் நிர்வாகத்திற்குட்பட்டதாகச் செயல்பட்டு வந்தன. பின்னர் இத்துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பால் உற்பத்தியைப் பெருக்கிட விழைந்த தமிழ்நாடு அரசு, மாநிலத்திலுள்ள அனைத்துப் பால் கூட்டுறவுச் சங்கங்களையும், பால் வளத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் 1-8-65 முதல் கொண்டு வந்தது.

அரசின் கட்டுப்பாட்டிலிருந்த பால் சேகரித்தல், சேகரித்த பாலை சென்னை நகரில் விநியோகித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள 1972-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல், தமிழ்நாடு பால்வள நிறவனம் துவக்கப்பட்டது. பிறகு தேசீய பால் வளர்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையினால் 1-2-81 முதல் இது தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்குத் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நியாயமான விலையினைப் பெற்றுத் தரவும், நுகர்வோர்களுக்குத் தரமான பாலினை நியாயமான விலையில் அளிக்கவும், பால் உற்பத்தி மற்றும் பால் பதனத் திறனை அதிகரிக்கும் நோக்குடன் பால் பெருக்குத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது.

30-6-89-இல் அனைத்துப் பால் கூட்டுறவுச் சங்கங்களில் 18,38,963 உறுப்பினர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் மூன்றடுக்கு முறையில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

(1) அடித்தளமான கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்; (2) மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்; (3) மாநில அளவில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்.

இவை தவிர பால் நுகர்வோர் சங்கங்கள் மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களில் அமைக்கப்பட்டு, பால் விநியோகப் பணியைச் செய்து வருகின்றன.

6,534 பால் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

**பால் பெருக்குத் திட்டம்- I**

1972-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் துவங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ரூ. 15.48 கோடி செலவிடப்பட்டது. இதன் விளைவாக நாள் ஒன்றுக்கு 3.02 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

**பால் பெருக்குத் திட்டம்- II**

பால் பெருக்குத் திட்டம் ஒன்றின் தொடர்ச்சியாக, பால் பெருக்கத் திட்டம் II, 1982 ஏப்ரல் முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் செங்கை-அண்ணா, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், பெரியார், கோவை, நீலகிரி, மதுரை, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் ரூ. 26.26 கோடி செலவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் இறுதியில் தினசரி 10.15 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டது.

**பால் பெருக்குத் திட்டம் III**

இரண்டாம் பால் பெருக்குத் திட்டத் தொடர்ச்சியாக மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் ஏப்ரல்'85 முதல் துவக்கப்பட்டது. இத்திட்டம் ரூ.68.19 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, தேசீய பால் வள வாரியத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூடுதல் பால் பண்ணைகள் அமைப்பதுடன், திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டன.

நாள் ஒன்றுக்குச் சராசரி 15,34,471 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, நாள் 1-க்கு 2,78,395 லிட்டர் உள்ளூர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பால் வள நிறுவனம் மூலம் சென்னை நகரில் தினசரி 6.14 இலட்சம் லிட்டர் பால் வழங்கப்பட்டு வருகிறது.

**மருத்துவ வசதி:**

இன்றைய நாளில் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ், கால்நடை மருத்துவர் கிராமங்களுக்கு நேரில் சென்று,

சங்க உறுப்பினர்களின் மாடுகளைப் பார்க்கிறார். கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, விவசாயிகளின் வீட்டு வாசற்படிக்கே மருத்துவ வசதி வருகிறது. இது தவிர, அவசரக் கால்நடை மருத்துவ உதவியும், சங்க உறுப்பினர்களுக்கு நாள் முழுக்க கிடைக்க வாய்ப்புள்ளது.



கால்நடை மருத்துவத் திட்டத்தில் உயர்ரகக் காளைகளின் விந்துகளிலிருந்து நல்ல கால்நடைகளை உருவாக்கி வளர்ப்பது ஒரு முக்கிய அம்சமாக உள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது 47 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னையிலும், மீதமுள்ள 16 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இதர மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் தினசரி 2,18,510 லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது. இச்சங்கங்களின் மூலம் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

இதுவரை, தமிழ்நாட்டில் 10 மகளிர் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. செயல்பட்டு வரும் 90 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 12,331 பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இச்சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழும் ஆதி திராவிட மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சங்கங்கள் மூலம் அங்கத்தினர்கள் நிதி உதவி பெற்று, வாழ்க்கையில் முன்னேறி வறுமைக் கோட்டினைக் கடப்பார்கள் என்பது திண்ணம். மகளிருக்கு எனத் தனியே மேலும் சில கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 10 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 500 மகளிருக்குத் தலா 2 கறவை மாடுகள் வழங்க ரூ. 25.72 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இதில் ரூ. 13.10 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது. 8 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்க ஆதிதிராவிட மகளிர் உறுப்பினர்களுக்குக் கறவை மாட்டு மானியம் ரூ. 4.99 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

பால் கறவை மாடுகள் வாங்க அரிசன நலத் திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டில் 4686 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ரூ. 41.99 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. 1989-90-இல் 10,000 நபர்களுக்கு ரூ. 50 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

1988-89-இல் தாட்கோ திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வாங்க 27,484 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ரூ. 280.64 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. 1989-90-இல் 29,561 நபர்களுக்கு ரூ. 315.42 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது.

## கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு அரசு உதவிகள்

கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளை ஏற்று ஒவ்வொரு மாதமும் கூட்டுறவு நூற்பாலையில் இருந்து 1,000 பேல் நூலும், தென்னிந்திய நூற்பாலை அதிபர் சங்கம் மூலம் 1000 பேல் நூலும் மொத்தம் 2 ஆயிரம் பேல் குறைந்த விலையில் கொடுக்க அரசு முடிவு செய்து உள்ளது.

கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளருக்கு 2 ஆயிரத்து 500 வீடுகள் இந்த ஆண்டு கட்டப்படும். இந்த வீடு ரூ. 15 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு அதில் ரூ. 5 ஆயிரம் அரசு மானியமாக வழங்கும். மீதி 10 ஆயிரத்தை நீண்ட காலக் கடனாகத் திருப்பித் தர வேண்டும்.

உயர்தர
அசைவ உணவு வகைகளுக்கு
திண்டி மாநகரிலே
சிறப்பான சேவை
புரிந்து வரும்
எங்களது நிறுவனம்

கோவை புகழ்

# "ஹோட்டல் ஸ்ரீசம்பூர்ணா"

21, சத்திரம் தெரு,
(டாக்ஸி ஸ்டாண்ட் சமீபம்)
திண்டுக்கல்-1
தொலைபேசி எண்: 3164

செயல்பட்டு வருகின்றது
என்பதனை மகிழ்வுடன்
தெரியப்படுத்துகின்றோம்.

பார்ட்டி ஆர்டர்கள் உடனுக்குடன்,
சூடாக சுவையாக ஏற்றுக் கொள்கின்றோம்.

*வாருங்கள் சுவைத்து மகிழ்ந்திடுவீர்.*




# அண்ணாமலைப் பல்கலைக்கழக வைரவிழா!

அண்ணாமலைப் பல்கலைக் கழக வைர விழா 14-12-'89 அன்று காலை 11.00 மணிக்குப் பல்கலைக் கழக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை வகித்தார். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வைர விழா மலரை வெளியிட, மேதகு குடியரசுத் தலைவர் அதனைப் பெற்றுக் கொண்டார். இணை வேந்தர் திரு. எம்.ஏ.எம். இராமசாமி வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சேதுநாராயணன் அறிக்கை வாசித்தார்.

### மேதகு குடியரசுத் தலைவர்

மேதகு குடியரசுத் தலைவர் தமது உரையில், 'பல்கலைக்கழக வைர விழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் நான் இங்கு படித்த காரணத்தால், இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

''மீனாட்சி கல்லூரியை மாற்றிப் பல்கலைக் கழகமாகத் தந்தவர் அண்ணாமலைச் செட்டியார். அவர் உயர்கல்வியைக் கோவிலாக மதித்துச் செயல்பட்டார். தமிழ் இலக்கியம், இசை ஆகியவற்றுக்குத் தனித் துறையைத் தோற்றுவித்துத் தமிழ் வளர்த்தார். இவரது வழியில் நின்று டாக்டர் முத்தையா செட்டியாரும், அதற்குப் பிறகு இப்போதைய இணை வேந்தராக இருக்கும் திரு. எம்.ஏ.எம். ராமசாமியும், பல்கலைக் கழகத்தை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள்.

''இந்தியாவில் 5 ஆயிரம் கல்லூரிகள் உள்ளன. பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் கல்வியின் தரம் பாராட்டும்படியாக இல்லை. கல்வித் தரத்தை மேம்படுத்தினால் தான், சமுதாயம் முன்னேறும்.

''பல்கலைக் கழகப் பட்டம் வேலை வாங்க ஒரு பாஸ்போர்ட் என்று நம் மக்கள் நினைக்கிறார்கள். படித்துப் பட்டம் பெறும் எல்லோருக்கும் அரசு வேலை கொடுப்பது என்பது முடியாத காரியமாகும். எனவே, மாணவர்கள் படிக்கும் போதே, அவர்களாகவே சுயவேலை செய்யக் கூடிய திறமை, நம்பிக்கை ஆகியவற்றை நாம் வளர்க்க வேண்டும்.

''இப்போது உள்ள கல்வி முறை பாராட்டும் வகையில் இல்லை. சமுதாயப் பணிக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் பயன் அடையும் வகையில் கல்வி முறை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

''சுதந்திரம் அடைந்த பிறகு, தொழில் துறையில் நம்நாடு மற்ற நாடுகள் பொறாமை அடையும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு மாணவரும் இந்திய ஒருமைப்பாட்டையும் கலாச்சாரத்தையும் கடைபிடிப்பார்களென நம்புகிறேன்'' என்றார்.

பிறகு அவர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒட்டப்பந்தயத்தில் வெற்றிபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக வீரர் திரு. ஆனந்த நடராசனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்.

### மேதகு ஆளுநர்

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், அரசர் முத்தையா செட்டியாரின் வாழ்க்கை

வரலாற்று நூலை வெளியிட்டு, கம்ப்யூட்டர் மையத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தையும் திறந்து வைத்து உரையாற்றினார்.

விழாவில் அவர் பேசியதாவது:-

''தற்போது இளைஞர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு, விரக்தி நிலவி வருகிறது. இது ஜனநாயகத்தின் சமூக அபாயம். இதைப் போக்கத் தகுந்த நடவடிக்கை மிகமிக அவசியமாகும். நாட்டில் 40 சதவீத ஆரம்பப் பள்ளிகளில் உரிய கட்டடங்கள் இல்லை. பல பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இருப்பதில்லை.

''நாட்டிலுள்ள பல முக்கிய பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரை ஒரே ஆசிரியர் பாடம் கற்பிக்கும் சூழ்நிலை உள்ளது. வடஇந்தியாவில் சில பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்க வருவதில்லை. அவர்களுக்குப் பதிலாக வேறு நபர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஆரம்பக் கல்வி நிலையங்களில் உரியவசதி இல்லை. ஆரம்பக் கல்வி நிறுவனம் மிக மிக முக்கியமானது. எனவே, அதற்கான கல்வி அளிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

''பெண்களுக்கு உரிய கல்வி அளிப்பதில் நாம் போதிய கவனம் செலுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், நலிவடைந்தோர் ஆகியோருக்குக் கல்வி அளிப்பதில் கவனம் செலுத்துவது நமது கடமையாகும்.

''நாட்டிலுள்ள பல கல்லூரிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. இரண்டாம் தரத் தன்மையுள்ள கல்லூரிகளிலிருந்து மூன்றாம் தர மாணவர்கள் வெளியேறுகின்றனர். அவர்கள் வேலைவாய்ப்பு கிடைக்காமல் திண்டாடுகின்றனர்.

''ஆரம்பத்தில் வலுவான அடித்தளம் அமைத்துக்கல்வி கற்றுத் தருவதன் மூலம் உயர்நிலைக் கல்வியைச் சிறக்கச் செய்ய முடியும்.''

### மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றிப் பேசுகையில், ''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நல்ல குடும்பத்தைப் பல்கலைக் கழகத்தோடு ஒப்பிட்டு, 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்று கூறினார். அப்படிப்பட்ட ஒரு நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கி இருக்கின்றது என்றால், அதற்குப் பெயர்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய சிறப்புகளை அடையாளப்பூர்வமாக உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், இப் பல்கலைக்கழகத்தில் முதல்தர மாணவராக விளங்கியவர் இன்றைக்கு இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக அமைந்திருக்கிற காட்சியைக் காணுகிறீர்கள். இந்தப் பல்கலைக்கழகத்திலே வரலாற்றுத் துறையிலே விரிவுரையாளராகப் பணியாற்றியவர் இன்றைய தமிழக ஆளுநராக இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற காட்சியைக் காணுகின்றீர்கள். இந்தப் பல்கலைக் கழகத்திலேயிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் அழைப்பை ஏற்று ''பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்தது. சிறுத்தையே வெளியே வா'' என்பதற்கேற்ப மாணவனாக வெளியில் வந்த பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கல்வி அமைச்சராக வீற்றிருக்கின்ற காட்சியைக் காணுகின்றீர்கள். எனக்கு இந்தப் பல்கலைக் கழகத்தோடு என்ன தொடர்பு என்றால், அவர்களோடெல்லாம் எனக்குத் தொடர்பு. எனவே, இந்தப் பல்கலைக் கழகத்தோடு எனக்கும் தொடர்பு இருப்பதாக நான் எண்ணிக் கொள்கிறேன்.''

''நம்முடைய எம். ஏ. எம். அவர்கள் உரையாற்றும்போது, இந்தப் பல்கலைக் கழகத்தின் மாணவன் ஆனந்த நடராசன் ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு பெற்றிருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

''இந்தப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 25 ஆயிரம் ரூபாய் அந்த மாணவனுக்குப் பரிசு தருவதாகவும், தனிப்பட்ட முறையில் அவர் 25 ஆயிரம் ரூபாய் பரிசு அளிக்க இருப்பதாகவும் சொல்லிவிட்டு, 'நீங்களும் ஏதாவது...' என்று அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

''இந்தப் பல்கலைக் கழகத்திற்கு இது மணி விழா ஆண்டு. எனவே பல்கலைக் கழகமும் அவர் தனிப்பட்ட முறையிலும் தருகிற இரண்டையும் சேர்த்து 50 ஆயிரம் ரூபாயோடு, முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாயையும் சேர்த்து மொத்தம் 60 ஆயிரம் ரூபாயாக இந்தப் பல்கலைக் கழகத்தின் அறுபதாம் ஆண்டு விழாவில் ஆனந்த நடராசனுக்குப் பரிசாக வழங்கப்படும்.

''நம்முடைய குடியரசுத் தலைவரைப்போன்ற குணக்குன்றுகளாக,



ஆசிய ஓட்டப் பந்தயத்தில் பல்கலைக் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர் திரு. ஆனந்த நடராசனுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்து, முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 10,000 வழங்குவதாக அறிவித்தார்.



நம்முடைய ஆளுநரைப் போன்ற ஆற்றல் மிக்கவர்களாக, நம்முடைய அன்பழகனார் போன்ற அறிவு செறிந்தவர்களாக மாணவர்கள் வருங்காலத்தில் வெளிவர வேண்டும் என்று வாழத்துகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் பல்கலைக் கழக வேந்தரும் தமிழக ஆளுநருமான டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கும் மாண்புமிகு மலேசியா அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்களுக்கும், டென்னிஸ் வீரர் திரு. விஜய் அமிர்தராஜ், இசைக் கலைஞர் திரு. ஜேசுதாஸ், தவத்திரு குன்றக்குடி அடிகளார், இந்திய நிலக்கரி நிறுவனத் தலைவர் திரு. எம்.பி. நாராயணன், இராணுவ அமைச்சக விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் அருணாசலம், முன்னாள் இந்திய அட்டார்னி ஜெனரல் திரு. பராசரன், எலும்பு மருத்துவ இயல் மேதை டாக்டர் எம். நடராசன், தொழிலதிபர் திரு. மருதப்பிள்ளை, சார்ட்டர்டு அக்கௌண்டண்ட் திரு. கிருஷ்ணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் சேது நாராயணன் ஆகியோருக்கும் சிறப்பு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதிய குறளோவியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை 15-12-'89 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் பெற்றுக்கொண்டார். குறளோவியம் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் செல்லப்பாவுக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

பொருளியல் துறைக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் ''சித்த மருத்துவ முறைகள் குறித்து ஆராய்ச்சிப் பணிகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மேற்கொள்ள வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

தொலை தூரக் கல்வி விடுதிக்கு அடிக்கல் நாட்டிப் பேசிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள், ''அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மீண்டும் இளங்கலைப் பட்ட வகுப்பினைத் தொடங்கி நடத்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மலேசியாஅமைச்சர் திரு. டத்தோ சாமிவேல் அவர்கள், ராணி சீதை ஆச்சி குடியிருப்பு வளாகத்தைத் திறந்து வைத்து ; அண்ணாமலைப் பல்கலைக் கழக வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்குவதாக அறிவித்தார்.



TNPSC விளம்பர எண்: 67

தமிழ்நாடு கூட்டுறவுப் பணியில், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 22.1.1990 அன்று மாலை 5.30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. (பகிரங்கப்போட்டி-1).

**சம்பளம்** : மாதம் ஒன்றுக்கு ரூ. 2,200 - 75 - 2,800 - 100 - 4,000.

**வயது** : 1.7.1989 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

**தகுதி** : The degree of M.A. (Co-operation) or M.Com. with Co-operation as a subject or must have passed the final examination conducted by the Institute of Chartered Accountants.

கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் பதவியைத் தற்காலிகமாக வகிக்கும் நபர்கள் தங்களுக்குப் போதிய வயது மற்றும் கல்வித் தகுதி இல்லையெனினும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவர்கள் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால் சம்பந் தப்பட்ட விதிகளில் இருந்து அரசினால் விலக்கு அளிக்கப்படுவார்கள்.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப் பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற் குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற் காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியி லிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.12.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாள ருக்கு வழங்கக்கூடிய 1.12.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-6 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) உடன், சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மேற்கூறிய வற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/2743/MS/89/ad-burea/3032

# கோழிப் பண்ணைகளில் காணப்படும் குறைகளும் நிவாரணங்களும்

டாக்டர் பெ. ரெங்கா ரெட்டி,
இணைப் பேராசிரியர்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம்,
நாமக்கல்.

கோழிப் பண்ணைகளில் பரவலாகக் காணப்படும் சில குறைபாடுகள், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றை, நாம் அடையாளம் கண்டு அவ்வப்போது களைவதனால், பண்ணையாளர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும்.

பண்ணையில் குறைபாடுகள் எனப் பார்க்கும்போது, கோழி வீடுகள் அமைப்பதில் தொடங்கி, உபகரணங்கள் உபயோகிப்பதிலும் குஞ்சுகளை வளர்க்கும்போதும், முட்டைக் கோழிகளைப் பராமரிக்கும் போதும் கையாளப்படும் முறைகள், தீவனம் அளிக்கும் முறைகள், அவற்றின் தரக்கட்டுப்பாடு, குடிநீரின் தரம் மற்றும் தேவையான அளவு அவ்வப்போது தரும் மருந்துகள், தேவையான தடுப்பூசிகள் ஆகியவற்றுடன் பண்ணைப் பதிவேடுகளைக் கவனமாக எழுதுதல் வரையில் நாம் கவனித்துக் களைய வேண்டிய குறைகள் அதிகம் காணப்படுகின்றன.

முதலில் வீட்டமைப்பைப் பற்றிப் பார்க்கும்போது, பல பண்ணைகளில் மண் தரையை அப்படியே வைத்துப் பண்ணையை அமைக்கின்றனர். இதனால் நோய்க் கிருமிகள் எளிதாகப் பரவுவதுடன் எலி, பெருச்சாளிகளின் தொல்லைகளும் அதிகமாகின்றனமேலும்கோழிகள் கழித்த பிறகு சுத்தம் செய்வதும் கடினமாகிறது.

எனவே, பண்ணைகளில் தரையைச் சிமெண்ட் அல்லது சதுரக்கல் கொண்டு அமைப்பது நல்லது. இவ்வாறு செய்வதன் மூலம் எலித் தொல்லைகளைத் தவிர்க்கலாம். மேலும் தரையைச் சுத்தம் செய்தலும் எளிதாகிறது. உபகரணங்களை எடுத்துக் கொண்டால் விலை குறைவு என்ற காரணத்தினால் பண்ணையாளர்கள் பலர் மண்ணாலான தீவனச் சட்டிகளை உபயோகிக்கின்றனர்.

மண் சட்டிகளால் தீவனங்கள் விரயமாவதுடன், சட்டிகள் அடிக்கடி உடையவும் வாய்ப்பு உண்டு. இதனால் கோழிகளுக்குச் சரியான அளவு தீவனம் கிடைக்காமல் போய் முட்டை உற்பத்தியும் குறைகிறது. இக்குறையைத் தவிர்க்க, துருப்பிடிக்காத இரும்புத் தகட்டினாலான அதாவது (C.I. Sheet) நீளத் தீவனத் தட்டுகள் அல்லது வட்டத் தீவனத் தட்டுகளைப் பயன்படுத்தலாம். மேலும் தீவனத் தட்டுகள், தண்ணீர்த் தட்டுகளின் எண்ணிக்கையைக் கவனிக்கும்போது, பல பண்ணைகளில் தேவைக்குக் குறைவாக இருப்பதைக் காணமுடிகிறது. 8 அடி நீளத் தட்டுகள் 40 கோழிகளுக்கு ஒன்று என்ற விகிதத்திலும், 18 அங்குல வட்ட வடிவமுள்ள தட்டுகள் 20 கோழிகளுக்கு ஒன்று என்ற விகிதத்திலும் பயன்படுத்தப் படவேண்டும். மேலும் கிரில்லுடன் கூடிய பிளாஸ்டிக் தொட்டிகள் 50 கோழிகளுக்கு 1 வீதம் அளிக்க வேண்டும்.

**குஞ்சு பராமரிப்பு முறைகள்:**

நிறையப் பண்ணைகளில் ஆயிரக் கணக்கான குஞ்சுகளை மொத்தமாக வைத்து வெப்பமூட்டிப் பராமரிக்கிறார்கள். குஞ்சுகளைச் சிறுசிறு குழுக்களாகப் பிரித்து வெப்பமூட்டிப் பராமரித்தல் நல்லது. ஒவ்வொரு குழுவிலும் 200 முதல் 250 குஞ்சுகள் வரை இருக்கலாம்.

செயற்கை முறையில் வெப்பமூட்டும்போது சாதாரண பல்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். நவீன அகச்சிவப்புக் கதிர் பல்புகள் (Infra Red Bulb) மூலம் வெப்பமளித்தல் மிகச் சிறந்தது. பல பண்ணைகளில் வெப்பம் குஞ்சுகளுக்கு அளவுக்கு அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ அளிக்கப்படுகிறது. இவ்வாறில்லாமல் சரியான அளவில் வெப்பம் தரப் படுவது அவசியம்.

காற்றுத் தடுப்புக்காகத் திரைகளைக் கட்டும்போது, பல பண்ணைகளில் முழுவதுமாக மூடிவிடுகிறார்கள். இதனால் பண்ணைக்குள்





## இசைப் பேரறிஞர்

## மதுரை சோமு மறைவு

**த**மிழ் இசை உலகில் தனிப் பெரும் இடத்தைப் பெற்றிருந்த இசைப் பேரறிஞர் மதுரை சோமு 9-12-'89 அன்று தனது 70-வது வயதில் மறைவெய்தினார்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் சீடரான இவர், கர்நாடக இசைத் துறையில் ஒளி வீசித் திகழ்ந்தார்.

தமிழக அரசின் கலைமாமணி விருது, மைய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்றவர் இவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரியின் முதல்வராகவும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக கௌரவப் பேராசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

அவரது மறைவுச் செய்தி கேட்ட முதல்வர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தி அனுப்பினார்.

மாபெரும் இசை மேதைக்குத் 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

---

குஞ்சுகளின் எச்சத்திலிருந்து உற்பத்தியாகும் அம்மோனியா வாய்வு வெளியேற வழியில்லாமல் போய் பலவழிகளில் குஞ்சுகளைப் பாதிக்கின்றது. அதனால் காற்றோட்டத்திற்காக மேலே சற்று இடைவெளி விட்டுத் திரைகளை அமைப்பது நல்லது.

### வளரும் கோழிப் பராமரிப்பு

பல பண்ணையாளர்கள் வளரும் கோழிகளை எடைக்குத் தகுந்தாற் போல் தரம் பிரித்து வளர்க்காமல் மொத்தமாக விட்டு விடுகின்றனர். இதனால் கோழிகள் ஒரே சீராக வளராமல் பெரிதும் சிறிதுமாக வளர்கின்றன. இதன் காரணமாகச் சிறிய கோழிகள் தாமதமாக முட்டையிடும் நிலையோ அல்லது முட்டையிடும் பருவத்தையோ அடையாமல் பண்ணையை விட்டு நீக்க வேண்டிய நிலையோ வரக்கூடும். இதைத் தவிர்ப்பதற்கு 8-வது வாரத்தில் ஆர்.டி.வி.கே. தடுப்பு ஊசி போடும் போதும், 16-ஆம் வாரம் இரண்டாவது முறை அலகு வெட்டும் போதும், குஞ்சுகளைத் தரம் பிரித்து வளர்க்க வேண்டும். வளரும் கோழிகளுக்குச் செயற்கை ஒளி தரக்கூடாது. சில பண்ணையாளர்கள் இவ்விஷயத்தில் தவறு செய்யும் போது கோழிகள் முட்டையிடும் பருவத்தில் அண்டித் தள்ளுதல், கொத்திக் கொள்ளுதல் போன்ற பிரச்சினைகளால் அதிகமாகப் பாதிக்கப்படும்.

### முட்டையிடும் கோழிப் பராமரிப்பு:

இடவசதி ஒவ்வொரு கோழிக்கும் 2 சதுர அடி அவசியம். இந்த இடவசதியைப் பல பண்ணைகளில் 1.75 சதுர அடியாகக் குறைத்து விடுகின்றனர். இவ்வாறு செய்வது கூடாது. பல பண்ணைகளில் முட்டைப் பானைகளை வைப்பதில்லை. 5 கோழிகளுக்கு ஒரு முட்டைப் பானை விகிதம் வைப்பது மிகவும் அவசியமாகும்.

அடுத்ததாக தீவனம் அளித்தல் பற்றிப் பார்க்கும்பொழுது, பெரும்பாலான பண்ணைகளில் தீவனத் தட்டுகளில் தீவனம் இருப்பதில்லை. தட்டுகளில் தீவனம் எப்பொழுதும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் தீவனம் குறைத்து வழங்கப்படுவது நிறையப் பண்ணைகளில் காணப்படுகின்ற குறைபாடாகும். முட்டையிடும் கோழிகளுக்குத் தீவனம் குறைத்து வழங்கப்படக் கூடாது. பண்ணையாளர்கள் பலர் கோழிகள் அதிகமாகத் தீவனம் உட்கொள்கின்றன என்று கூறுகிறார்கள். இதைத் தடுக்க, இரவில் விளக்குகளை அணைக்கும் முன்னால் தீவனத் தட்டில் தீவனம் இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம். தீவனத்தை அப்படியே இரவில் விட்டுவைப்பதால், எலிகள் தொல்லை பெருகித் தீவனம் விரயமாக வாய்ப்புகள் உண்டாகும்.

நல்ல தரமான தீவனப் பொருட்களை அதிகம் பண்ணைகளில் பயன்படுத்துவது இல்லை. நார்ச் சத்து மிக்க அரிசித் தவிடு, உமி கலந்த தவிடு, ஈரப்பதமுள்ள மற்றும் பூஞ்சைக் காளான் தாக்கிய மக்காச் சோளம், உப்பு அதிகமாக உள்ள கிருமி கலந்த மற்றும் புரதத்தரம் குறைந்த மீன்தூள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். தவிட்டில் நார்ச்சத்து குறைவாகவும், மக்காச் சோளத்தில் ஈரப்பதம் குறைவாகவும், பூஞ்சைக் காளான் தாக்குதல் இல்லாமலும், மீன்தூளில் உப்பு குறைவாகவும், புரதச் சத்து அதிகமாகவும், கிருமிக் கலப்பு இல்லாமலும் இருக்கிற தீவனப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும். தாதுப் பொருட்கள் தரமானதாக இல்லாமல் இருந்தால் வளரும் கோழிகளில் வளர்ச்சி குன்றியும், முட்டையிடும் கோழிகளில் தோல் முட்டைகள் அதிகமாக இடும் நிலையும் ஏற்படுகின்றன. அதனால் நல்ல தரமுள்ள தாதுப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும்.

சொந்தமாகத் தீவனக் கலவை தயாரிக்கும்போது, ஒருமுறை வைட்டமின் $AB_2D_3K$ கலவையாகவும், மறுமுறை தாது உப்பு மற்றும் வைட்டமின் கலந்த (சப்லிவெட் 'எம்' போன்ற) கலவையாகவும் தயாரிக்கிறார்கள். இதனால் தீவனச் செலவு கூடுகிறது. தரமான தாது உப்புகளைப் பயன்படுத்தினால் கோழிகளுக்கு அத்தியாவசியமான வைட்டமின்கள் $AB_2D_3$ போன்றவற்றை மட்டும் கலந்தால் போதுமானது. இதன் மூலம் தீவனச் செலவைக் குறைக்கலாம்.

சில பண்ணையாளர்கள் குஞ்சுகளுக்கும், வளரும் கோழிகளுக்கும் ஒரே தீவனம் வழங்குகிறார்கள். பருவத்திற்கேற்ற தீவனம் தரப்பட வேண்டும். வளரும் கோழிகளுக்குப் புரதச்சத்து குறைவான தீவனம் தருவது நல்லது. இதனால் தீவனச் செலவு குறையும். குடிதண்ணீர் பற்றிப் பார்க்கும்போது, குடிதண்ணீர்த் தட்டுகளில் தண்ணீர் இல்லாமல் இருப்பதைச் சில பண்ணைகளில் காண்கிறோம்.

காலையில் டானிக் மருந்துகள் கலந்த தண்ணீர் தந்தவுடன் உடனடியாகத் தட்டுகளில் சாதாரணக் குடிநீரை நிரப்பிவிட வேண்டும். தண்

## 'பல்லடம், திருப்பூர் வட்டங்கள்'

கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூர் பல்லடம் பகுதிகள் இணைந்து பல்லடம் வட்டம் பெரிய அளவில் இருந்து வந்தது. இந்த வட்ட அலுவலகங்கள் திருப்பூரில் இயங்கி வந்தன. பல்லடம் பகுதி மக்கள் அரசாங்க தொடர் பணிகளுக்குத் திருப்பூர் சென்றுவர வேண்டி இருந்தது.

எனவே, பல்லடம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். அவர்கள் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசு பல்லடம் வட்டத்தைப் பல்லடம், திருப்பூர் ஆகிய இரண்டு வட்டங்களாகப் பிரித்துள்ளது. பல்லடம் வட்டத்தில் பல்லடம், சூலூர், சுல்தான் பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் அடங்கும். திருப்பூர் வட்டத்தில் திருப்பூர் நகராட்சி, திருப்பூர், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் அடங்கும்.

15-12-1989 அன்று பல்லடம் பச்சாபாளையத்தில் உள்ள புதிய வட்ட அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் கலந்து கொண்டு பல்லடம் வட்டத்தைத் தொடங்கி வைத்தார். தொடக்க விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன் இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்தார்.

---

ணீர் குறைவானால் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து முடிவில் சுத்தமாக முட்டையிடுவது நின்று போகும் நிலையும் ஏற்படலாம். எனவே எப்பொழுதும் கோழிகளுக்குத் தேவையான தண்ணீர், கிருமிகள் அற்ற நல்ல தண்ணீராக இருத்தல் அவசியம்.

பாசி படிந்த தண்ணீர்த் தொட்டியில் உள்ள தண்ணீரைப் பல பண்ணைகளில் உபயோகிக்கிறார்கள். இதைத் தடுக்கத் தண்ணீர் சேமிக்கும் தொட்டியை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஒன்றில் தண்ணீரைச் சேமித்தும், மற்றொன்றைப் பிளீச்சிங் பவுடரால் கழுவிச் சுத்தமாகச் சுண்ணாம்பு பூசி உலரவைக்கவும்வேண்டும். இவ்வாறு மாற்றி மாற்றிச் செய்வதன் மூலம் நல்ல சுத்தமான தண்ணீரைக் கோழிகளுக்கு அளிக்கலாம்.

பிளீச்சிங் பவுடரை 1,000 லிட்டர் தண்ணீருக்குச் சுமார் 7 கிராம் விகிதம் பயன்படுத்த வேண்டும். தண்ணீர்த் தொட்டியை மூடி வைப்பதின் மூலம் தண்ணீர் அசுத்தப்படாமலும் பாசி வளர்வதற்குத் தேவையான சூரிய ஒளியையும் கட்டுப்படுத்தலாம்; தண்ணீர் கொட்டுவதைத் தவிர்ப்பதற்காகப் பல பண்ணையாளர்கள் தட்டுகளை உயரத்தில் அமைக்கிறார்கள். இதனால் கோழிகளுக்குத் தண்ணீர் சரியான அளவு கிடைக்காமல் போகிறது. தண்ணீர்த் தட்டுகளைச் சரியான உயரத்தில் சரியான எண்ணிக்கையில் அமைத்தல் அவசியம்.

### நோய்த்தடுப்பு மற்றும் அலகு வெட்டுதல்

முதலாவதாக மருந்துகளைக் கண்டபடி – ஒழுங்குமுறையற்ற முறையில் தருவதைத் தவிர்க்க வேண்டும். மருந்துகளைச் சரியான முறையில் தருதல் அவசியம். ஒரு சிலர், அருகில் உள்ள பண்ணையாளர் உபயோகிக்கிறார்கள் என்று தாங்களும் தேவையின்றிச் சில மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர். இதைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும். மருந்துகளை நிபுணர்களின் அறிவுரைப்படி தரவேண்டும். பூச்சி நீக்குதலைச் சரியான கால இடைவெளியில் காலம் தவறாமல் மேற்கொள்ளுதல் மிகவும் அவசியம். மற்றும் நோய்ச்சிகிச்சைக்காகத் தரப்படும் மருந்து கலந்த தண்ணீரைச் சிலர் ஒரு நேரம் மட்டும் தந்து மற்ற நேரங்களில் வெறும் தண்ணீர் தருகிறார்கள். இது முற்றிலும் தவறானது. நோய்ச் சிகிச்சைக் காலம் முடியும் வரை மருந்து கலந்த தண்ணீர் மட்டுமே தரப்பட வேண்டும்.

பல பண்ணைகளில் அட்டவணைப்படி, தடுப்பூசி போடுவதில்லை. தடுப்பூசி சரியான காலத்தில் தவறாமல் போடப்பட வேண்டும். ஒவ்வொரு பண்ணையாளரும் அந்த அந்தப் பகுதிக்கான தடுப்பூசி அட்டவணைகளை வைத்திருத்தல் வேண்டும். மேலும் தடுப்பூசி மருந்து குளிர் உறைநிலை தொடரில் (Cold chain) சரியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளதா, அதனுடைய பயன்படுத்தும் காலம் முடிந்துவிட்டதா? போன்ற விஷயங்களை, தடுப்பூசிகள் போடும் முன்பு பார்க்க வேண்டியது அவசியம். பின்னர் தடுப்பூசி மருந்துகள் கோழிகளின் எண்ணிக்கைக்கேற்றபடி போதுமான அளவு இருக்கிறதா என்பதை மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

இரண்டாம் முறை, அலகு வெட்டுவதைப் பல பண்ணையாளர்கள் முட்டையிடும் பருவம் வரை செய்வதில்லை. முட்டையிடும் பருவத்தில் அலகு வெட்டுவதால் கோழிகள் சரியான தீவனம் உட்கொள்ளாமல் முட்டையிடுவது தாமதமாகிறது. இதைத் தடுக்க 16-வது வாரத்தில் பண்ணையாளர்கள் கண்டிப்பாக அலகு வெட்டுவது அவசியமாகும்.

### பதிவேடு பராமரிப்பு

பெரும்பாலான பண்ணையாளர்கள் பண்ணை பற்றிய பதிவேடுகளைச் சரியான முறையில் பராமரிப்பதில்லை. முட்டை எண்ணிக்கையை நிறையப் பேர் இத்தனை அட்டைகள் என்றும், தீவன அளவை பலர் இத்தனை மூட்டை என்றும் குறிப்பிடுகிறார்கள். இதைப் போல இல்லாமல் ஒவ்வொரு பண்ணையாளரும் முட்டைகளின் எண்ணிக்கை, தீவன அளவு, கோழிகளின் எண்ணிக்கை, வரவு, செலவு போன்றவற்றைப் பதிவேட்டில் தவறாமல் பதித்தல் வேண்டும். பண்ணையில் நடக்கும் எல்லாச் செயல்களும் ஒழுங்காக நடைபெறுகின்றனவா அல்லது எங்கு குறைபாடுகள் உள்ளன என்று ஆய்ந்து அறிந்து, அவற்றைத் தக்க சமயத்தில் களைய, பண்ணைப் பதிவேடுகள் உற்ற துணையாக இருக்கும்.

மேற்கூறிய குறைபாடுகளை நீக்கி, மேலே குறிப்பிட்ட நிவாரணங்களைக் கடைப்பிடித்து வந்தால், கோழிப் பண்ணையின் இலாபத்தைப் பன்மடங்கு பெருக்கலாம்.

# படமும் செய்தியும்




தந்தை பெரியார் நினைவு நாளையொட்டி சென்னை பெரியார் திடலில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். (24-12-'89)

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். (24-12-'89)






தமிழ்நாடு மாநிலச் சுற்றுப்புறச் சூழல் நலக் குழுவின் 18-ஆவது கூட்டம் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது (26-12-'89)

தமிழ்நாடு மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் 50- வது கூட்டம் மாநிலத்' தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. (26-12-'89)






அனைத்து மாநிலக் கைவினைப் பொருட்களின் கண்காட்சியை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தொடங்கி வைத்து , கண்காட்சியினைப் பார்வையிட்டார். (22-12-'89)

ஓசூரில் நடைபெற்ற மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். (20-12-'89)



# தொல்லை தரும் தெள்ளுப்பூச்சி



படம்-1



படம்-2



படம்.3

பூனைத் தெள்ளுப் பூச்சி என்றால் என்ன?

'டினாசெப்பாலிடிஸ் பெலிஸ்' எனும் இந்தப் பூனைத் தெள்ளுப் பூச்சி உலகெங்கிலும் காணப்படுகிறது. இது மனிதனையும் மிருகங்களையும் தாக்கி இரத்தம் உறிஞ்சும் தெள்ளுப்பூச்சிகளில் மிக முக்கியமானது.

பூனைத் தெள்ளுப்பூச்சி என்றாலும், இது சர்வசாதாரணமாக மனிதனையும், மாடு, எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு, குதிரை, நாய், முயல், கீரி, எலி இனம் மற்றும் காட்டு மிருகங்களான மான், நரி, ஓநாய், கழுதைப்புலி, கரடி, சிறுத்தை, புலி போன்ற மிருகங்களையும் எளிதில் தாக்கி இரத்தத்தை உறிஞ்சும் தன்மை வாய்ந்தது. கோழிகளையும், பறவைகளையும் கூட இது தாக்கும்.

தெள்ளுப்பூச்சி இறக்கையற்ற பூச்சியினத்தைச் சேர்ந்ததால், இது வெட்டுக்கிளி போல் குதித்து ஓடும். உடல் பக்கவாட்டில் ஒடுக்கப்பட்டு தலையில் சீப்பு போன்ற முட்களுடன் காணப்படும் (படம் 1). பருமனில், இது நெருப்புக்குச்சியின் தலையளவு இருக்கும். பெண் இனத்தைக் காட்டிலும் ஆண் இனம் சிறியதாக இருக்கும். கொசு போன்று அல்லாமல், ஆணும், பெண்ணும் இரத்தத்தை உறிஞ்சி, பல மாதங்கள் உயிர் வாழும். ஒரு முறை இரத்தத்தை உறிஞ்சிய தெள்ளுப்பூச்சி தவறாமல் பல முறை இரத்தம் உறிஞ்சினால்தான் பல மாதங்கள்

உயிர் வாழ முடியும். இல்லையேல் அவற்றிற்கு ஆயுள் குறைவு. ஆனால் கூட்டுப்புழுவிலிருந்து வெளிவந்த தெள்ளுப்பூச்சி பல வாரங்கள் வரை பட்டினியுடன் மிருகங்கள் விட்டுச் சென்ற இடங்களிலும் மனித சஞ் சாரமற்ற வீடுகளிலும் காணப்படும்.

பெண் தெள்ளுப்பூச்சி ஒரே சமயத்தில் 20 முட்டைகளையும், தனது வாழ்க்கையில் 400 முதல் 500 முட்டைகளையும் மிருகங்களின் குடில்களிலும், படுக்கை விரிப்புகளி லும், நாய், பூனை போன்றவற்றின் உரோமங்களிலும் இடுகிறது. இப் படியிடப்பட்ட முட்டைகள் உரோ மத்திலிருந்து உருண்டு, தரையிலோ, விரிக்கப்பட்ட கோணி, தரை விரிப் புகளிலோ அல்லது மிருகங்களின் தொழுவங்களிலோவிழுகின்றன.முட் டைகள் சர்க்கரைத் தூள் போன்று காணப்படும். இரண்டு நாட்களில் முதல் இடைநிலைப்புழுக்கள் வெளி வருகின்றன. இவை, தரை அல்லது விரிப்புகளில் காணப்படும் கழிவுப் பொருட்களையும், உறைந்த இரத்தத் துளிகளையும் ஆகாரமாக உட் கொண்டு பத்து நாட்களில் மூன்று இடைநிலைப் புழுப்பருவங்களையும் பூர்த்தி செய்து, கூட்டுப்புழுவாக மாறி, கூட்டுப்புழு நிலையில் 15 நாட்கள் கழித்து, 25 முதல் 28 நாட்களில் தெள்ளுப்பூச்சிகளாக மாறு கின்றன. கருவுற்ற சூழ்நிலையில் இருக்கும் மிருகங்களிலும், ஈன்ற கன்றுகளிலும் இரத்தத்தின் ஹார் மோன் நிலை அதிகம் இருப்பதால், இத்தெள்ளுப்பூச்சிகள் அவற்றில் அதிகமாகக் காணப்படும். காரணம், இவை இரத்தத்தில் காணப்படும் ஹார்மோன்களைத் தங்களது இன விருத்திக்கு உபயோகித்துக் கொள் கின்றன.



படம் - 4

பெண் தெள்ளுப்பூச்சி தன் தேவைக்கு அதிகமாக இரத்தத்தை உறிஞ்சி ஆசனவாய் வழியாக (படம் 2) வெளியே தள்ளுவதால், இரத்தம் சிறு சிறு துளிகளாகக்கீழே விழுந்து, உறைந்து விடுகிறது. உறைந்த இரத்தத்துளி இவற் றின் இடைநிலைப் புழுக்களுக்கு சிறந்த ஆகாரமாகவும், இனவிருத்தி செய்வதற்கு ஏற்றதாகவும் அமைகிறது.

தெள்ளுப்பூச்சிகள் திரும்பத் திரும்ப (படம் 3) பலமுறை கடித்துத் துன்புறுத்துகின்றன. கடிக்கப்பட்ட இடங்களில் தோல் தடித்து, கொப் புளங்கள் உண்டாகி (படம் 4) பல நாட்கள் நீடிக்கின்றன. இரத்தம் சிறு சிறு துளிகளாக வெளியேறுவதால், இரத்தசோகையும் ஏற்படுகிறது. கடிக்கப்பட்ட இடத்தில் அதிக நமச்சல் ஏற்படுவதால், மிருகங்கள் அவ்விடத்தைக் கடித்து, உரோ மத்தைப் பிய்த்து விடுவதால், தோல் திட்டுத் திட்டாக உரோமமின்றிக் காணப்படும். நாய், பூனை போன்ற மிருகங்களில் காணப்படும் ஒரு வகை நாடாப் புழு பரவுவதற்கு இவ்வகைத் தெள்ளுப் பூச்சிகள் கார ணமாய் இருக்கின்றன. சிறுவர் தெள்ளுப்பூச்சிகள் காணப்படும் நாய், பூனைக் குட்டிகளுடன் விளை யாடும்பொழுது, தற்செயலாக இவ் வகைத் தெள்ளுப்பூச்சிகளை உட் கொண்டால், நாடாப் பூச்சிகள் சிறுவர் குடலில் முதுநிலை அடைய வாய்ப்பு உள்ளது. ஒரு தெள்ளுப் பூச்சியின் உடலில் உண்டாகும் நாடாப்பூச்சியின் இடைநிலைப் பரு வத்தைப் படத்தில் (படம் 5) காணலாம்.

வீடுகளில் காணப்படும் மிருகங் களின் படுக்கை விரிப்புகளான கோணி, கம்பளங்கள், மிதியடி போன்றவற்றை வெய்யிலில் காயப் போடுவதால் தெள்ளுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். மிருகங்கள், அவற்றின் தொழுவங்கள் போன்ற குடியிருப்புகளில் 0.25 முதல் 0.5 சதம் வரை மலேத்தியான் சுமுத்தி யான் போன்ற பூச்சி கொல்லி களைத் தெளிப்பதாலும் அவற்றைக் கட்டுப்படுத்தலாம். பூனைகளின் தோல் மிருதுவானதால், மேற்கூறிய பூச்சி கொல்லிகளை அவற்றின் மீது பயன்படுத்துதல் கூடாது. மேலும் விவரங்களுக்குக் கால்நடை மருத்துவரை அணுகலாம்.


என்.ஏ. ஜோசப்,
ஒட்டுண்ணியியல் துறை
தமிழ்நாடு கால்நடை அறிவியல்
பல்கலைக் கழகம்,


படம் - 5



# நூல் நயம்

## சர்க்கரை மணி
### (பாகம்-1)

ஆசிரியர்: ஏ. சுந்தரம் எம்.டி.
உதவிப் பேராசிரியர்
நீரிழிவுநோய் மருத்துவத் துறை
சென்னை மருத்துவக் கல்லூரி
சென்னை-3.
வெளியீடு: சர்க்கரை நோய்க் கல்வி வெளியீடு
பக்கம்: 212 (விலை குறிக்கப்படவில்லை)

சர்க்கரை நோய் எனப்படும் நீரிழிவுநோய் குறித்த எல்லாத் தகவலும் இந்நூலில் இடம் பெற்று உள்ளன. நோய் உள்ளவர்கள் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுவதற்குரிய வழிவகைகள் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டு உள்ளன.

சிறுநீர்ப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை ஆகியவை விளக்கப் பட்டுள்ளன. சர்க்கரை நோயாளிகள் பயன்படுத்தும் இன்சுலின் ஊசி குறித்தும், அதனை டாக்டர்களின் உதவியின்றி நோயாளிகள் தாமே போட்டுக் கொள்ளும் முறை குறித் தும் நூலாசிரியர் விவரித்துள்ளார். இந்த வகையில் இந்நூல் செய்முறை (practical) நூலாகவே விளங்குகிறது.

சர்க்கரை நோயாளிகளின் உண்வு, அவர்கள் செய்ய வேண்டிய உடற் பயிற்சிகள் ஆகியவை சின்னஞ்சிறு குழந்தைக்கும் புரியும் வண்ணம் தெளிவாக்கப்பட்டுள்ளது. சர்க்கரை நோயாளிகளுக்கெனத் தனியாக உணவு சமைக்கப்பட வேண்டிய தில்லை என்பதை நூலாசிரியர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு முத்திரை குத்தப்படுவதால் நோயாளிகள் மனம் வருத்தமுறுவர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நூல் முழுதும் கேள்வி-பதில் பகுதியாக இருப்பதால் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடி கிறது. நடை எளிமையாக இருப்பது ஒரு சிறப்பம்சம் ஆகும். ஏராளமான வரை படங்கள்-வண்ணப் படங்கள் நூலை அணி செய்கின்றன.

-தமிழ்ப்பித்தன்.

## 'பாவாணர்'

ஆசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்
வெளியீடு: பாவாணர் பதிப்பகம்,
மே/பா. திருக்குறள் மன்றம்,
தாமோதர முதலியார் சாலை
பெங்களூர்-560008.

விலை: ரூ.30 பக்கம்: 348

மொழிப் பேரறிஞர் ஞா. தேவ நேயப் பாவாணர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் இது. பாவாணர் பல்வேறு காலங்களில் பிறர்க்கு எழுதிய கடிதங்களிலிருந் தும் அவர்தம் நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்ட செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவை படிப் போர்க்கு வெறுந் தொகுப்பாக மட்டும் தோன்றாமல் சுவையான விருந்தாகவும் அமைந்துள்ளன.

பாவாணர் வாழ்நாள் முழுதும் வறுமையிலே வாழ்ந்தாலும், இறுதி மூச்சு வரை தனித்தமிழ்க் கொள்கை யிலிருந்து சிறிதும் வழுவாமல், தம் கொள்கையினைக் கடைப்பிடித்து வந்தார் என்பதைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

பாவாணர் கல்வியில் புலமை பெற்றவர் மட்டுமல்லர், பிறர்க்கு இரங்கும் தன்மையுடையவர், என்ப தும், செய்நன்றி மறவாதவர் என்ப தும் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளன.

பாவாணரின் இயல்புகள் மட்டு மன்றி அவரது அங்க அமைப்புகளும் ஆசிரியரால் வர்ணிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்கும்போது, பாவாணரை நேரிற் காண்பது போலவே தோன்றுகிறது.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய பாவாணர் கருத்தைத் தெரிவிக்கும் கடிதங்கள் இந்நூலில் இடம் பெற்று உள்ளன. 'பல்சுவைப் பாகு', 'நெருங்கலும் நிகழ்தலும்' ஆகிய தலைப்புகளில் வெளியிடப் பெற் றிருக்கும் பல செய்திகள் குறிப்பிடத் தக்கவை. இன்னும் எத்துணை எத் துணையோ செய்திகளைச் சுவைபட ஆசிரியர் இந்நூலில் குறிப்பிட்டிருப் பது பாராட்டத்தக்கது. பாவாணரின் தோற்றம் முதல் மறைவு வரை ஒவ் வொரு காலத்திலும் நிகழ்ந்த செய்தி களை நன்கு ஆய்ந்து எழுதியுள்ளார் ஆசிரியர். இது ஓர் அரும்பெரும் முயற்சியாகும்.

-தே. மணி

## 100 விஞ்ஞான வினாக்களுக்கு விடைகள்

ஆசிரியர் : ராஜப்பா குருசாமி,
வெளியீடு: தமிழ்க்கடல் பதிப்பகம்,
ஐ-19, டர்ன்புல்ஸ் சாலை,
முதலாவது குறுக்குத் தெரு,
நந்தனம்,
சென்னை-600 035.

விலை:ரூ.36 பக்கம்:379

அன்றாட வாழ்க்கையில், அறி வியலின் தேவை இன்று மிக இன்றி யமையாததாகிவிட்டது; அதன் அற்புத ஆற்றல்கள் நம்மை வியப்பில் ஆழ்த் துவதுமட்டுமல்ல, ஆக்கப்பணிகளுக் கும் பெருமளவு பயன்பட்டு வரு கின்றன. இவற்றையெல்லாம் விளங்க வைப்பதே இந்த நூல்.

பூமியின் வயது என்ன? என்ப திலிருந்து, வைட்டமின்கள் என்றால் என்ன? என்பது வரை நூறு விஞ் ஞான வினாக்களுக்குத் தக்க விடை யளிக்கிறது இந்நூல்.

பள்ளி மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும்கூட இந்நூலைப் படித்து, அறிவியல் பற்றிய சுவை யான தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

### இந்திய விடுதலை இயக்க வரலாறு

**ஆசிரியர் :** ஆர். வேங்கடராமன்
**வெளியீடு:** வண்ணச்சுடர் பதிப்பகம்,
2. இ,பிளாக்,
மூன்றாவது மாடி,
ஜெமினி பார்சன்
அபார்ட்மெண்ட்ஸ்,
சென்னை-600 006.

விலை:ரூ.25 பக்கம்:230

இந்திய விடுதலை தியாகத்தால் விளைந்த வரலாறாகும். அண்ணல் காந்தியடிகள் தலைமையில் இந்தத் தேசமே வீறுகொண்டெழுந்தது - வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த அந்த வீர வரலாற்றை விவரிக்கிறது இந்நூல்.

இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் என்பதிலிருந்து தொடங்கி, முதல் இந்தியச் சுதந்திரப் போர், இந்திய தேசிய காங்கிரஸ், உப்பு சத்தியாக் கிரகம், இந்திய தேசிய இராணுவ அமைப்பு முதலான வரலாறுகள் இந்நூலில் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்திய விடுதலை வரலாற்றை ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். குறிப்பாக இளைய தலைமுறை இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டியது கடமையாகும்.

—பி.வி. கிரி

### நாடகச் சோலை

**ஆசிரியர் :** மா. அய்யாசாமி,
**வெளியீடு:** மங்கை இல்லம்,
75-என்.ஜி.ஓ., காலனி
திருவள்ளூர்-602 001,
செங்கை மாவட்டம்.

பக்கம்:140 விலை ரூ.12

இந்திய விடுதலைப் போராட்டத்தினை மையமாகக் கொண்டும், சில சமூகப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டும் எழுதப்பட்ட ஒன்பது நாடகங்களின் தொகுப்பு நூல் இது.

பள்ளி மாணவர்களுக்கென்றே எழுதப்பட்டவை என்பதால் மட்டுமல்ல; நூலாசிரியர் பள்ளி ஆசிரியர் என்பதனாலும் அத்தனை நாடகங்களும் எளிய, இனிய நடைத் தமிழில் எழுதப்பட்டுள்ளன.

வானொலி - தொலைக்காட்சி ஆகியவற்றில் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்த நாடகங்களை இளஞ் சிறார்கள் படித்தும் பயன்பெறும் நோக்கத்தோடு இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர் உலகம் இதனைப் படித்துப் பயன் பெறலாம்.

### எண்ணக் கோலங்கள்:

**ஆசிரியர் :** கடலூர் பாலன்,
**வெளியீடு:** நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிமிடெட்,
41-பி. சிட்கோ எஸ்டேட்
சென்னை-98.

பக்கம்:84 விலை ரூ.8

இது ஒரு கவிதை நூல். பல்வேறு தலைப்புகளின்கீழ் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு. அத்தனையும் மரபுக் கவிதைகளும் அல்ல; புதுக்கவிதைகளும் அல்ல. இசைக்கத் தக்கதாக எழுதப்பட்டுள்ள சந்தப் பாடல்கள்.

பாடுபடும் ஏழை மக்களின் உள்ளக்குமுறல் உணர்ச்சிமிக்க சொற்களால் புனையப்பட்டுள்ள முற்போக்கு இலக்கிய நூல் இது.

'மின்னிச் சிவக்குது வானம்
சொல்லத் தடுக்குது நாணம்'

-என்பது போன்ற இயற்கை பற்றிய பாடல்களும் உண்டு. பாடும் கலை வல்லார் படித்து மகிழலாம்.

-இல. இராசேந்திரன்



★ விஞ்ஞானம் - அறிவு - தன்மான உணர்ச்சி இவையின்றேல், பட்டம் பல பெற்றாலும், பணம் பல கோடி சேர்த்தாலும் பயன் இல்லை.

★ அமைதி உங்களைத் தாமதமாக- ஆனால் நிச்சயமாக வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும்.

### மஞ்சள், இஞ்சி, வெங்காயம், வெள்ளைப் பூண்டு வைத்தியம்

**ஆசிரியர்:** மயிலைத் தொண்டன்,
**வெளியீடு:** தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ., பெரியார் பாதை
(மேற்கு)
சூளைமேடு
சென்னை-600094.

விலை:8.00 பக்கம்:80.

மஞ்சள், இஞ்சி, வெங்காயம், வெள்ளைப் பூண்டு ஆகியவற்றின் வகைகள், இவைபற்றிய சரித்திரகால நிகழ்ச்சிகள், இவற்றின் சக்திகள், மருத்துவ குணங்கள் ஆகியவை மிக விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

என்னென்ன நோய்களுக்கு இவற்றைப் பயன்படுத்தி என்னென்ன சிகிச்சைகள் செய்யலாம் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக நாம் பயன்படுத்தும் இவற்றிற்கு இத்தனை மகத்துவமா? என்று வியக்க வைக்கிறது இந்நூல்.

-என். குமாரசாமி

## வரப் பெற்றோம்

கீழ்க்காணும் நான்கு நூல்கள் **காந்திய இலக்கியச் சங்கம்,** தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, (மதுரை-625 020) வெளியீடுகள்.

**1. கீதைக் கதைகள்:**

**ஆசிரியர்:** வீ. செல்வராஜ்,

விலை:ரூ.2 பக்கம்:44

**2. எதை எவ்வளவு உண்பது?**

**ஆசிரியர்:**
டாக்டர் எச்.ஸி. மென்கெல்,

விலை:50 காசு பக்கம்:10

**3. நீங்கள் அமிலத் தன்மை உடையவர்களா?**

**ஆசிரியர்:**
டாக்டர் எச்.ஸி. மென்கெல்.

விலை:50 காசு பக்கம்:8

**4. உண்ணா நோன்பு:**

**ஆசிரியர்:** சா. நாகலிங்கம்

விலை:ரூ.2 பக்கம்:16

பயன் அடைந்தோர் பகர்வன

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

# அற்புதமான திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 11-8-89-இல் மானாமதுரைக்குச் சென்றிருந்தபோது பத்தரைக்கோடி ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப் பட்டன. அதன் மூலம் பலன் பெற்ற நூற்றுக்கணக்கான மக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை நெஞ்சாரப் போற்றினர்; நாவார வாழ்த்தினர்.

அதிலும் குறிப்பாக - மகளிர் நலத்திட்டங்களால் பயன்பெற்ற தாய்மார்கள் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நலம் பெற்றிருக்கிறார்கள்;மனம் மகிழ்ந் திருக்கின்றார்கள்.

**டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் இன்று ஏராளமான தாய்மார்கள் பயன் பெற்று வருகிறார்கள்.**



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர், மானா மதுரையைச் சேர்ந்தவரான திருமதி பி. நாகரெத்தினம். அற் புதமான அத்திட்டம் பற்றி அவர் கூறியது இது:

''ஏழை எளிய குடும்பத்துப் பெண்மணிகளுக்கு நிதியுதவும் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் மிகவும் அற் புதமான திட்டமாகும். மானாமதுரை பட்டரைத் தெருவில், 3-பி எண் ணுள்ள வீட்டில் வசித்து வருபவள் நான். எனக்கு முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்தது. இரண்டாம் முறை கருத்தரித்திருந்த நான் அந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி கேட்டு விண்ணப்பித்திருந்தேன். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவரான என் கணவர் கூலி வேலை செய்து வரு கிறார். ஆகையால் அந்த நிதி, பிரசவ காலத்தில் எங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது.

இரண்டு குழந்தையோடு நான் குடும்பக்கட்டுப்பாடும் செய்து கொண்டுவிட்டேன். என்போன்ற ஏழைக் குடும்பத்துப் பெண்களுக்கு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் மூலம், பேருதவி புரிந்து வரும் தமிழக முதல்வர் அவர்களுக் கும் தமிழ்நாடு அரசுக்கும் நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக் கிறோம்!''

-துரை. தாமரைச் செல்வம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

TNPSC Advt No 68

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேருவதற்காக 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் நடத்தப்பெறும் நுழைவுத் தேர்வு.

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேருவதற்கான அடுத்த நுழைவுத் தேர்வு இந்திய நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கிறது. இத்தேர்வு நடத்தப்பெறும் இடங்களில் சென்னையும் ஒன்றாகும். இத்தேர்வு எழுத்து மூலத்தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகிய இரண்டும் கொண்டதாக இருக்கும். எழுத்து மூலத்தேர்வு, ஆங்கிலம், கணக்கு, பொது அறிவு ஆகிய மூன்று தாள்கள் கொண்டது. கணக்குத்தாள் ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் விடையளிக்கப்பட வேண்டும். பொது அறிவுத்தாள் இந்தியிலோ, வட்டார மொழிகளில் (Regional languages) எவையேனும் ஒன்றிலோ விடையளிக்கப்படலாம். நேர்முகத்தேர்வானது விண்ணப்பதாரர்களின் அறிவுக் கூர்மை, தனித்தன்மை ஆகியவற்றை ஆராய்வதாக இருக்கும்.

விண்ணப்பதாரர்களின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ் நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 1.7.1990 அன்று 12 வயது நிரம்பியவராகவும் 13 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். இந்த வயது வரம்பில் எந்த தளர்த்தலும் கிடையாது. விண்ணப்பதாரர் ஏற்புப் பெற்ற பள்ளியில் (Recognised School) மேற்குறிப்பிட்ட இராணுவக் கல்லூரியில் சேர அனுமதிக்கப்படும் பொழுது ஏழாம் வகுப்பு தேறியவராக இருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 என்ற முகவரிக்கு 8.1.1990 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேர வேண்டும்.

மேற்கொண்டு முழு விவரங்கள், மாதிரி வினாத்தாட்கள், விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றை தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

DIPR/2744/MS/89/MAA

# திருவூர்த் திருக்கோயில்

சி. வசந்தி
அகழ்வாய்வாளர்
சென்னை.



சென்னையிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் திருவள்ளூர் செல்லும் வழியில் கூவம் ஆற்றின் தென்கரையில் திருவூர் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் பாழடைந்த, ஆனால் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன்கோயில் உள்ளது. இந்த கோயிலின் கட்டட அமைப்பு பிற்காலப் பாண்டியரின் (கி.பி.13-ஆம் நூற்றாண்டு) கலைப்பணியினை ஒத்துள்ளது. இங்கு காணப்படும் கல்வெட்டுகளின் மூலமும் இக்கூற்று மெய்ப்பிக்கப்படுகின்றது.

இக்கோயிலில் 12 கல்வெட்டுக்கள் உள்ளன. இவை முறையே முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன், தெலுங்கு சோழ மன்னன் விஜய கண்ட கோபாலன் மற்றும் விஜய நகர அரசர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

சோழ மன்னர்கள் வலிமை குன்றிய நேரத்தில் தெற்கே பாண்டியர்கள் தம் படை பலத்தைப் பெருக்கிக் கொண்டனர். முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் (கி.பி. 1251-1284) தமிழகத்தின் வட எல்லையான வேங்கடம் வரை சென்று தம் பேரரசை விரிவுபடுத்தினான். அப்போது பல கோயில்களை எழுப்பிச் சென்றுள்ளான். இத்தகைய கோயில்களில் ஒன்றுதான் திருவூரில் உள்ள சிவன் கோயிலாகும். கி.பி. 1261-ஆம் ஆண்டு, முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியனின் 11-ஆம் ஆட்சியாண்டில் திருவூர்க் கோயில் கற்கோயிலாகக் கட்டப்பட்டது. இதனைச் செய்வித்தவன் ஒழுகரை எனப்படும் குலோத்துங்க நல்லூரைச் சேர்ந்த திருவண்ணாமலை உடையான். இதே மன்னனின் 18-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1268) ஒழுகரை வணிகன் பெரிய ஆண்டவன் இக்கோயிலுக்குத் தேவதானமாக நிலமளித்த செய்தியும் அறியப்படுகிறது.

தெலுங்கு அரசன், விஜயகண்ட கோபாலனின் 18-ஆம் ஆட்சியாண்டில், இக்கோயில் கணக்குளை நேர் செய்தபோது, அயத்தூர் என்ற பழைய தேவதான கிராமம் கணக்கில் இல்லாதது கண்டுபிடிக்கப் பட்டது. இதனைச் சீர் செய்தபோது கிடைத்த வருவாயைக் கொண்டு சித்திரை மாதத்தில் விழா எடுக்கப் பட்டது. இறைவன் ரிஷ்யசிங்கீஸ்வரர் எனவும், இவ்வூர் பெருமுளையூர் (தற்போது பெருமாள்பட்டு எனப்படுகிறது) என்னும் உலகளந்த சோழச் சதுர்வேதி மங்கலத்தின் ஒரு பகுதியாக ஈக்காடு கோட்டத்தில் இருந்ததும் அறியப்படுகிறது.

கோயில் நுழைவாயிலில் உள்ள விஜயநகர அரசர் சளுவ மன்னன் திம்மைய தேவர் கி.பி. 1502-இல் தமக்கு முன்னர் ஆண்ட திப்பைய தேவரின் நினைவாக அளித்த கொடை பற்றியும், கி.பி. 1519-ஆம் ஆண்டு கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டில், இம்மன்னனின் பிரதானியும், திருவூர் மக்களும் சேர்ந்து அளித்த 6 பொன், திருவூரின் அருகில் உள்ள வரதராஜன்பட்டு, மகாமண்டல புருஷன்பட்டு ஆகிய கிராமங்களிலிருந்து, பெறப்பட்ட நீர் கூலி என்ற தகவல்களையும் இவ்வூர்க் கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகிறது. கிருஷ்ணதேவராயரின் காலத்தில், இவவூர்த் கோயிலின் பரிவாரத்தார் குடியிருக்க, கிராம மக்களிடமிருந்து நிலம் பெறப்பட்டது. விஜயநகர அரவீடு அரசர் வெங்கடாத்திரியின் காலத்தில், கரியமாணிக்கப் பெருமாளுக்கு அளிக்கப்பட்ட நிவந்தம் பற்றியும் அறிய முடிகிறது.

கருவறை முகமுனை கி.பி.14-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட செய்தியும், அட்டகபிள்ளையார் என வழங்கப்பட்ட பிள்ளையாருக்கு அளிக்கப்பட்ட நிவந்தம், எல்லை அம்மன் கோயிலுக்கு அளிக்கப்பட்ட ஸ்ரீநகர தோட்டம் போன்ற பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகள் இவ்வூர் பற்றி நாம் அறியச் செய்பவை.

இக்கோயிலின் அமைப்பை நோக்கும்போது கருவறை கிழக்கு நோக்கி உள்ளது. கோபுர நுழைவாயில் பழுதடைந்துள்ளது. கோபுரத்தை அடுத்து மகா மண்டபமும் முன்மண்டபமும் உள்ளன. மகா மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இம்மண்டபங்களில் துர்க்கை, பைரவர், (தலையில்லா) விஷ்ணு போன்ற உதிரிச் சிற்பங்களும் உள்ளன.

இவ்வூரில் கூவம் ஆற்றின் கரையில் மேற்குப் புறமுள்ள ஒரு சிறிய பிள்ளையார் கோயில், கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டகப் பிள்ளையாராக இருத்தல் வேண்டும். கல்வெட்டு குறிப்பிடும் எல்லையம்மன் தற்போது ஒசுரம்மன் என வழங்கப்பட்டு இவ்வூரின் எல்லையில் தென்மேற்கில் உள்ளது.

WITH BEST COMPLIMENTS FROM:

## S.R.P. TOOLS LIMITED

Regd. Office: Main Door No. 108 Thambu Chettee Street
III Floor, Madras 600 001

### MANUFACTURING RANGE

**MADRAS PLANT ★ RANIPET PLANT**

| MADRAS PLANT | RANIPET PLANT |
|---|---|
| Milling cutters of all types | ★ Gear Hobs |
| Reamers of all types | ★ Gear shaper cutters |
| Core drills, Counter sinks | ★ Gear Shaving cutters |
| Counter Bores, Taps, | ★ Broaches |
| Chasers, Carbide Tipped | ★ Milling cutters (Relief Ground) |
| Tools, Special Tools to drawings etc. | ★ |

Write with details of your requirement for competitive offer to our Sales Office at:

II Floor, 10 Gopalapuram, 6th Street, Madras 600 086
Phone: 477123/476026 Telex: 041-7125 SRP IN
Grams: DIEHEADS

### ஒரு இனிய செய்தி

அரசு நிகழ்ச்சிகள்,
திருமண விழாக்கள் மற்றும்
பொது நிகழ்ச்சிகள் அனைத்துக்கும்
உடனே நேரில் வந்து நல்ல முறையில்,
சிறந்த தொழில் நுட்ப வல்லுநர் மூலம்
பலதரப்பட்ட விதத்தில் வீடியோ கேமரா
படங்கள் எடுத்துத் தரப்படும்.
இவர் அமெரிக்காவில்
முழு பயிற்சி பெற்றவர்.
உடனே அணுக வேண்டிய முகவரி.

**A. JOSEPH** I.F.P.P.
MEMBER,
FREELANCE
PHOTOGRAPHER,
CAMARAMAN
36, ARNI ROAD,
VELLORE-2
Phone: 24828



தந்தி: ''டிக்ஸ்'' தொலைபேசி எண்: 4709

## திண்டுக்கல் பாலித்தின் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச்சங்கம் லிட்.,

ஐ-3, தொழிற்பேட்டை,
திண்டுக்கல்-6

புதுப்பொலிவுடன் வெளிவரும் ''தமிழரசு'' சிறப்புடன் அமைந்துள்ளமை கண்டு பெருமையடைகின்றோம்.

தரமான பாலித்தின் பைகள் வாங்க மற்றும் அச்சு வேலைகள் செய்ய
சிறந்த கூட்டுறவு நிறுவனம் ''டிக்ஸ்''
தங்கள் தேவைக்கு அணுகவும்

மா. இராமசுவாமி,
உதவி இயக்குநர்/தனி அலுவலர்

(தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், சென்னை அவர்களின் நேரடிப்பார்வையில் இயங்கும் கூட்டுறவு நிறுவனம்)

# தெருக் கூத்துக் கலை

-டாக்டர் ஏ.என். பெருமாள்,
துறைத் தலைவர்,
நாடகக் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

மேடை அலங்காரங்கள் இன்றித் தெருக்களில் ஆடலும் பாடலுமாக நடத்தப் பெறும் நாடகங்களைத் 'தெருக்கூத்து' என்று கூறுவர். இசைப் பாடல் நிறைந்த இசை நாடகங்களை நாட்டுப்புறத்தில் பெரும்பாலான மக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்கூத்தாகவே கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். வேடம் புனைந்த நடிகர் நாட்டுப்புறத்தில் தெருக்களில் மாத்திரமின்றி வயல் வெளிகளிலும் கூத்துகளை நடத்துவர்.



உழைப்பின் கடுமையும் செல்வத்தில் குறைவும் கொண்ட நாட்டுப்புற மக்களுக்கு அரங்க அமைப்புக் காட்சித் திரைகளும், ஒளிச் சிறப்பும், பொருத்தமான ஆடைப் புனைவும் கொண்ட நாடகங்களைப் பார்க்கவும் நடத்தவும் வசதி இருப்பதில்லை. ஆகையினால், எளிய நிலையில் நடத்தப்பெறும் கூத்துகளைக் கண்டே நிறைவுற்றனர். தெருக்கூத்தாக நடிக்கத் தக்கவாறு காட்சி மாற்றங்களைப் பற்றிக் கவலைப் படாத இசை நாடகங்கள் பல எழுதப்பெற்றன. அவை இரவில் தொடங்கப் பெற்று விடிய விடிய நடத்தப் பெறும்.

வேடப்புனைவு பொருத்தமாக இருக்கும் என்று கூறவியலாது. அரசன் என்றால் எல்லா நாடகங்களிலும் ஒரே மாதிரியான ஆடை அணிகளாகத்தான் இருக்கும். அவ்வாறே அரசி, அமைச்சன், சேவகன், தோழன், தோழி ஆகிய பாத்திரங்கள் தனித்தனி வேடப் புனைவுடன் வருவர். தாங்கள் இன்னார் என்று தெரிவிக்கும் முறையில் அவர்கள் வரும்போதே தங்கள் பெயர், பதவி, நாடு, நகரம் அனைத்தையும் குறிப்பிட்டுக்கொண்டே பாடுவர். மக்கள் புரிந்து கொள்வர்.

காட்சிகள் மாறும்போது, தங்கள் செயல்களைக் குறிப்பிட்டுப் பாடுவர். இனி என்ன செய்வர் என்பதை முன்பே அறியும் நிலையில் பாடல்கள் அமைக்கப்பெறும். கதையைவிடவும் அவர்களின் பாடலும் ஆடலும் மக்களால் பெரிதும் விரும்பப்பெறும். அவர்களின் ஆடலைப் பொருத்தமான நடிபபு என்று கூறவியலாது.



தெருக்கூத்தை ஆந்திராவில் நடத்தப் பெற்ற வீதி நாடகங்களுடன் ஓரளவில் ஒப்பிடலாம். அவை அதைவிடவும் கூடுதல் கலை நுட்பத்துடன் நடத்தப்பெற்றதாக அறியவியல்கிறது. தெருக்கூத்தில் பாடல் திறன் மிகுந்தும், நடிப்புத் திறன் குன்றியும் இருந்ததாகக் கூறுவர். தொடக்கத்திலிருந்தே இறுதி வரை ஒரு பாத்திரம் ஒரே ஆடை அணிகளுடன் தோன்றும். ஆகையினால், முதலில் தன்னை அறிமுகப்படுத்துவது போன்று பின் வருகைகளில் பாடுவதில்லை.

தெருமுனையில் இருவர் ஒரு வெள்ளைத் துணியைப் பிடித்திருப்பர். பக்க மேளக்காரர் பக்கத்தில் அமர்ந்து பாடுவர். இருவர் இரு பந்தங்களைத் தூக்கிப் பிடித்திருப்பர். நடிகன் உள்ளே இருந்து பாடிக்கொண்டே திரையைத்தள்ளிக் கொண்டு வந்து பாட்டைத் தொடர்ந்து ஆடத் தொடங்குவான். கட்டியங்காரன் திரையால் முகத்தை மறைப்பதும் மூடுவதுமாகச் சிறிது நேரம் நாடகம் பார்ப்பவருடன் கண்ணாமூச்சி விளையாடிய பின்னரே திரையை ஒதுக்கிவிட்டு வருவான்.

பாடலின் ஒரு வரியை நடிகன் பாடியதும் பக்கப் பாடகர் அதையே திருப்பிப் பாடுவர். நடிகன் ஆடுவான். இவ்வாறு கூத்து நடந்தேறும். புராண இதிகாசக் கதைகளையே நடிப்பதனால் அவை மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அரிதாரம், செந்தூரம், கரி ஆகியவற்றைக் கொண்டு ஒப்பனை செய்வர். அத்திப்பால் கொண்டு மீசை, தாடியை ஒட்டுவர்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் நடைபெறும் தெருக்கூத்துகளை வடக்கத்தி நாடகம், தெற்கத்தி நாடகம் என இருவகையில் பிரிக்கலாம். இவை கூத்துகள் நடைபெறும் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகளாகும். மாவட்டத்தின் தென்பகுதிகளில் நடைபெறும் தெற்கத்தி நாடகங்களில் இராமாயணம் தொடர்பான நாடகங்களும், அரிச்சந்திரா, கோவலன் கதை போன்ற நாடகங்களும் பெரும்பாலும் நடத்தப் பெறுகின்றன. வளமான பகுதிகளில் இக்கூத்து நடைபெறும். மாவட்டத்தின் வடபகுதிகளில் நடைபெறும் வடக்கத்தி நாடகங்கள் பெரும்பாலும் பாரதக் கதைகளைக் கொண்டு அமையும். மிகச் சிறுபான்மையில் வேறு சில புராணக் கதைகளும் கூத்தாக நடத்தப் பெறும். இந்த நாடகங்களைக் கட்டை கட்டி ஆடுதல், கட்டாமல் ஆடுதல் என இரண்டாகப் பிரிப்பர். கட்டை என்று கூறுவது மரக் கட்டையிலான சில அணிகளையே ஆகும். புஜக் கட்டை, மார்ப்பதக்கம், காதுக்கட்டை, கிரீடம் அவற்றில் முக்கியமானவை. இவை கனமில்லாத கலியாண

**உ**ன்னால் எதைச் செய்யமுடியாது என்று மற்றவர்கள் சொல்லுகிறார்களோ, அதைச் செய்து காட்டுவதுதான் வாழ்க்கையில் பெரிய இன்பம்.

—வால்டர் பேக்ஹாட்

முருங்கை என்னும் ஒரு வகை மரத்தால் செய்யப் பெறுகிறது என்பதை,

'கண்ணால முருங்கைக் கட்டை
கண்ணாடி பளபளக்க...'

என்னும் கூத்துப் பாடலால் அறியலாம்.

இலங்கையில் மட்டக்களப்புப் பகுதியில் (பட்டிகோலா) வடமோடி, தென்மோடிஎன்று இரு வகையான கூத்துகள் நாட்டுப்புற மக்களால் நடத்தப் பெறுகின்றன. தென்மோடி தமிழ் அமைப்பும் வடமோடி தெலுங்கு அமைப்பும் கொண்ட கூத்துகளை நடத்துவன. முன்னதில் காதல், மணம் ஆகிய காட்சிகளும், அடுத்ததில் வீரம், வெற்றி ஆகிய உணர்ச்சிகளும் நிறைந்து காணப் பெறும். ஒன்று அகப்பொருளும் மற்றது புறப் பொருளும் கொண்டிருப்பதைக் கண்டு உணரலாம். தமயந்தி விலாசம், கண்டி நாடகம், இராம நாடகம், ஆரவல்லி சூரவல்லி நாடகம், அலங்காரரூபன் நாடகம் ஆகியவை நடத்தப் பெறும்.

விலாசம் நடப்பதற்குரிய மேடை, வட்ட அமைப்பில் ஒரு முழம் உயரத்தில் அமைக்கப் பெறும். மக்கள் நாலுபக்கம் அமர்ந்து பார்ப்பர். கூட்ட நடனம் இதில் இருக்கும். நாடகம் என்னும் பெயரில் நடத்தப் பெறுவதற்கான அரங்கம் சதுரமாக இருக்கும். பரதநாட்டியமும் இடம் பெறும். ஒரு வெள்ளைத் துணி திரையாகத் தொங்கவிடப் பெறும். இதனை 'நாட்டுக்கூத்து' என்றும் கூறுவர்.

தெருக்கூத்தில் சண்டை, கொலைக் காட்சிகள் குறைவு. அவை வருவதாயின், பாடல்கள் மூலம் மறைத்துக் காட்டிவிடுவர். மக்கள் பாடலைக் கேட்டுப் புரிந்து கொள்வர். சாலரா அல்லது தாளம், மிருதங்கம் ஆகியவற்றைத் தட்டிப் பக்கப் பாட்டுப் பாடுவர்.

வரவரத் தெருகூத்தின் மதிப்பு குறைந்து கொண்டு வருகிறது. மேடைகள் அமைத்து, வசதிகளைப் பெருக்கி, ஆடை அணிகளைத் தகுதிக்குத் தக்கவாறு அணிந்து, வேடப் புனைவுகளைப் பொருத்தமாகக் கொண்டு, ஆடலை நடிப்பாக மாற்றிப் பாடலைக் குறைத்து, உரையாடலை உரைநடையாக அமைத்து, நாடகங்களை நடத்தத் தொடங்கினர். மக்களின் மனம் அவ்வாறு அமைந்த நாடகங்களை நாடியது.

கல்வியறிவற்ற சிலர், தெருக் கூத்தை ஊருக்கு ஊர் சென்று நடத்தி, அதன் மூலம் கிடைத்த பொருளைக் கொண்டு வாழ்ந்தனர். பாமர மக்களே அதைப் பாாத்துக் களித்தனர். கற்றவர்கள் அதை வெறுத்து ஒதுக்கினர். கீழ்த்தரமான உரையாடல் மூலம் மக்களை மகிழ்விக்கக் கூத்தாடுவோர் முயன்றனர். அவை வசந்தருது வருணனை, தோட்டச் சிருங்காரம், விரகதாபம், மன்மதக் கேலி முதலிய காமச்சுவை மலிந்த பழைய காட்சிகளாகவே இருந்தன. அவற்றை மக்கள் வரவர ஒதுக்கவே முயன்றனர். கீழோரிடையில் தெருக் கூத்து, உருக்குலைந்து காணப்பட்டது.

முன்னர் ஆண்டாண்டுதோறும் விழாக் காலங்களில் மிகச் சிறப்

## உங்கள் கவனத்துக்கு



நார்கள் உள்ள உணவுப் பொருளை சேர்த்துக் கொள்வதன் மூலம் சர்க்கரை நோயும், சிறு குடல் புற்று நோயும் நீங்கும்

கரோட்டின், வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த பழங்கள் காய் கறிகள் சாப்பிடுகிறவர்கள் நுரையீரல் புற்று நோய் வராமல் பாதுகாக்கப்படுகின்றனர் என சிகாக்கோ மருத்துவக்குழு கூறுகின்றது. 2000 பேரிடம் 19 ஆண்டுகள் நடத்திய சோதனையின் மூலம் இவ்வுண்மை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

காரட், தக்காளி, பசலைக் கீரை போன்றவற்றிலும் மற்றுமுள்ள சிகப்பு, மஞ்சள், பச்சைக் காய்கறிகளிலும் பழங்களிலும் இச்சத்துப் பொருள் அடங்கியுள்ளது.

பாகத் தெருக்கூத்து, ஊர்தோறும் நடந்தது என்பது உண்மை. குமரி மாவட்டத்தில்அகத்தீசுவரம் ஊர் முத்தாரம்மன் விழாவில், பங்குனி, சித்திரை மாதங்களில், மிக நல்ல முறையில் தெருக்கூத்து நாடகங்கள் நடந்தனவாக அறிகிறோம். அம்மன் வீதி வலம் வரும் நேரங்களில், தெரு மூலைகளில் நகரும்மேடை'களிட்டு அதில் நடிகர்கள் கலைச் சிறப்புடன் மாரக்கண்டேயன், அரிச்சந்திரன், சிறுத்தொண்டன், பிரகலாதன், நல்லதங்காள் போன்ற நாடகங்களை நடத்தி இருக்கின்றனர். அன்று தெருக்கூத்தாக நடத்தப் பெற்ற நாடகங்கள் இன்று ஆலயத்தின் முன் அமைக்கப் பெற்றுள்ள மேடையில் நடத்தப்பெறுகின்றன. அன்றைய கூத்துகள் இசைநாடக உருவில் ஏடுகளாக இன்னும் அங்கு இருக்கின்றன. அதுபோன்று, பல ஊர்களில் தெருக்கூத்து நடத்தப்பெற்றுள்ள செய்தியை அறியலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நவதானியங்களைக் கொண்டு, முளை கட்டுதல் என்னும் சடங்கை நடத்தி, அய்யனாருக்குக் குதிரை எடுப்பு, காளை கட்டு முதலியவற்றை நடத்துவர். முதலில் மந்தையம்மன் கோயிலிலிருந்து. அய்யனுக்குக் குதிரை எடுத்துக் கொண்டாடுவர். மறுநாள் கூத்து தொடங்கும். பொதுவாக அம்மன் கோயில்களிலேயே கூத்துகள் மிக அதிகமாக நடத்தப் பெற்றிருக்கின்றன.

பில்லைமங்கலத்தில் மந்தையம்மனுக்கும், அழகாபுரியில் பொன்னழகியம்மனுக்கும், சிறுகூடல்பட்டியில் மலையரசிக்கும், கீரணிப் பட்டியில் முத்துமாரியம்மனுக்கும், கண்டவராயன் பட்டியில் காளியம்மனுக்கும் கண்ணனூர், நார்த்தாமலை ஆகிய ஊர்களில் மாரியம்மனுக்கும், விழாக் காலங்களில் தெருக்கூத்துகளை நடத்திக் கொண்டாடி, மகிழ்ந்துள்ளனர். பெரும்பாலும், சித்திரை, வைகாசி மாதங்களில், இத்தகைய கூத்துகள் நடத்தப் பெற்றிருக்கின்றன. அறுவடை இல்லாத காலமாகப் பார்த்துக் கூத்துகளை நடத்தி இருக்கின்றனர். பெரும்பாலும், விவசாயத்தைத் தொழிலாக உடைய நாட்டுப்புற மக்கள், அவ் வேலை இல்லாத மாதங்களில்தான் கூத்துகளை நடத்துவது வழக்கம்.

## அண்ணாவின் அறிவு மொழிகள்



கடல் நீரிலே கன்னல் சுவையைக் காண முடியாது. காட்டுக் கூச்சலிலே கல்யாணி ராக ஆலாபனத்தைக் கேட்க முடியாது.

■

நெஞ்சிலே வலுவிருப்பின் வெற்றி தஞ்ச மென்று உரைத்து வந்து நம்மிடம் கொஞ்சிடுவது உறுதி.

■

மௌனமாக இருப்பவனை ஊமை என்று கருதுவதும், சண்டையில் ஒருவன் சேராததாலேயே அவனுக்குச் சக்தி இல்லை என்று எண்ணுவதும் முட்டாள்தனமாகும்.

■

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல்புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன், நமது மனத்தை உருவாக்க உதவுகின்றன.

■ ■ ■

கூத்துகளைக் கோயில்களில் நடத்துவதில் மக்களுக்குச் சிறந்த இறைப் பற்றுணர்வும், சில நம்பிக்கைகளும் இருந்தனவாகத் தோன்றுகிறது. முக்கியமாக மாரியம்மன் அருளால் மழை பொழிந்து, நாடு செழிக்கக் கூத்தாடுதல் வேண்டும் என்று நம்பினர். விராட பருவத்தை நடித்தால் உடனே மழை பெய்யும் என்று, இன்றும் மக்கள் நம்புகின்றனர்.

குமரி மாவட்டத்தில் மழை இல்லாத காலத்தில் விராட பருவத்தைக் கூட்டாக இருந்து படிக்கும் பழக்கம், சமீப காலம் வரை இருந்தது. கூத்து நடக்கும்போது மக்கள் கூட்டமாக இருப்பதும் அங்குப் பேரொலி எழுவதும் மழையைத் தருவிக்கும் ஆற்றலாக விளங்குகிறதோ என்று கருதுவதற்கும் இடம் உள்ளது. அறிவியல் முறையில் சிந்தித்தால், சில உண்மைகள் விளங்கலாம்.

குழந்தைப்பேறு வாய்க்காதவர்கள், அம்மனுக்குக் கூத்து நடத்தி வேண்டிக்கொண்டதாகவும் தெரிகிறது. பெரும்பாலும் இத்தகைய வேண்டுதலுக்குச் 'சத்தியவான் சாவித்திரி' நாடகம் நடத்தி இருக்கின்றனர். ஊரின் நலம், மழை ஆகியவற்றை நாடி 'கோவலன் நாடகம், வள்ளி திருமணம், பவளக் கொடி, அல்லி அர்ச்சுனன், வில் வளைத்து மாலையிடல், விராட பருவ நாடகம்' ஆகியவற்றை நடத்தியுள்ளனர். திருமணம் நடக்க வேண்டுதல் செய்யும்போது 'சீதா கல்யாணம், மீனாட்சி கல்யாணம்' போன்ற நாடகங்கள் நடத்தப் பெற்றிருக்கின்றன. இவ்வாறு மிகவும் நம்பிக்கையுடன் பக்தியோடு வேண்டுதலாக நடத்தப்பெற்ற நாடகக் கூத்துகள் காலக் கழிவால் மதிப்பிழந்து விட்டன.

## மாணவர் பக்கம்

### அறிவுச்சுடர்

அறிவுச்சுடர் அறிவுச்சுடர் அறிவுச்சுடர் அறிவுச்சுடர்

1. சந்தனம் அதிகம் விளையும் மாநிலம் எது?
2. உலகிலேயே அதிக இரும்பு உற்பத்தி செய்யும் நாடு எது?
3. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் யார்?
4. நமது தேசியக் கொடியில் மத்தியிலுள்ள சக்கரத்தில் மொத்தம் எத்தனை ஆரக் கால்கள் உள்ளன?
5. கடலின் ஆழத்தைக் கணக்கிடும் அளவு முறையின் பெயர் என்ன?
6. அஷ்ட பரிமளம் எவை?
7. 25-வது ஆண்டு விழாவினை வெள்ளி விழா என்றும், 50-வது ஆண்டு விழாவினைப் பொன் விழா என்றும் சொல்கிறார்கள். 12-வது ஆண்டு விழாவினை எப்படிச் சொல்கிறார்கள்?
8. அண்ணல் காந்தியடிகளை ''மகாத்மா'' என்று அழைத்தவர் யார்?
9. நான்கு உபவேதங்கள் எவை?
10. புகைப்படங்களை எடுக்கப் பயன்படும் கலர் பிலிம்களைக் கண்டறிந்தவர் யார்?

(விடைகள் அடுத்த பக்கம் பார்க்க)



## பட்டமும் பாராட்டும்

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலைக் கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம். ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை, ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப் பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழா தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனை, பன்மடங்கு பெருக்கி, பார்மகிழத்தருவதற்கே, சூல்கொண்டுலவுவது மேகம்; அறிகின்றோம். தன் தோகைகளை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ! தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானேயா அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்கின்றாள்? இல்லை-மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர், திருவிளக்கு-பொற்குவியல்-புள்ளிக் கலாபமயில்-கார் மேகம்-நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள், இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக்கொடுப்பதுவே பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பு. நாட்டின் பொதுவுடமை, நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள். மறந்திடுவோர் அல்லர் நீவிர்.

—பேரறிஞர் அண்ணா

(மதுரைப்பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் 7.9.1967-இல் ஆற்றிய உரையிலிருந்து)

## நம்பிக்கை வெற்றி தரும்

- எழிற்பித்தன்



அறிவுக்கண்ணைத் திறப்பதற்கே கல்வி
அறவழியில் நடப்பதற்கே செல்வம்
நெறியறிய வேண்டுமிந்த உள்ளம்
நெறிமறந்தால் வாழ்க்கை ஒரு பள்ளம்!

புதுவிடியல் ஆக்குகின்ற சோலை
பொலிவடையும் வாழ்வியலே தேவை
விதிகளுண்டு கட்டுப்பட வேண்டும்
விலகிச்சென்றால் குட்டுப்பட வேண்டும்!

உறுப்புகளால் மாந்தராவ(து) இல்லை
உறவுகொண்டு வாழ்வதுதான் எல்லை
பொறுப்புகளை நாம்ஏற்க வேண்டும்
பொதுமைநலம் பேணிடவே வேண்டும்!

தெருக்களென்று ஊருக்காக உண்டு
திசைகளென்று நாட்டுக்காக உண்டு
இருப்பதெல்லாம் நம்பிக்கை ஒன்று
எழுந்துவிட்டால் வெற்றியென்று நம்பு!

## விளையும் பயிர்



**த**ஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மேல் நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் கோ. வெங்கடாசலபதி.

இவர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு மாவட்ட அளவில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார். பள்ளியின் வாலிபால் அணியின் தலைவராகவும் உள்ள இம்மாணவர், கூடைப்பந்து, சதுரங்கம், குண்டெறிதல், ஓட்டப் பந்தயம் முதலிய பல விளையாட்டுப் போட்டிகளில் முதல் பரிசு களைப் பெற்றுள்ளார். சிறப்பாக வாலிபால் விளையாட்டுப் போட்டியில் மாவட்ட அளவில் முதல் இடத்தைப் பெற்று — முதற் பரிசான சுழற் கோப்பையை இவர் பெற்றுள்ளார்.

கல்வி மாவட்ட அளவில் நடைபெற்ற தமிழ்க் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசும், ஓவியம் தீட்டும் போட்டியில் பரிசும் பெற்றுள்ள இவர், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவற்றிலும் பங்கு கொண்டு வருகிறார்.

## அறிவுச்சுடர்



**விடைகள்:**

1. கர்நாடகம்
2. ஐக்கிய அமெரிக்கா
3. அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்சாண்டர் கிரகாம்பெல்
4. 24 ஆரக்கால்கள்
5. ஃபேத்தம் (Fathem)
6. 1: சந்தனம் 2. புனுகு 3. கோரோசனை 4. கஸ்தூரி 5. ஜவ்வாது 6. அகில் 7. பச்சைக் கற்பூரம் 8. குங்குமப்பூ
7. பட்டு (Silky Anniversary)
8. மகாகவி ரவீந்திரநாத் தாகூர்
9. அ) ஆயுர் வேதம், ஆ) தனுர் வேதம், இ) காந்தர்வ வேதம், ஈ) அர்த்த சாஸ்திரம்
10. அமெரிக்காவைச் சேர்ந்த ஈஸ்ட்மென் (1883)

மா. தா. ஸ்ரீதர்
பத்தாம் வகுப்பு 'சி: பிரிவு,
இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி (தெற்கு)
சென்னை-600 017.

பலவீனன் பாதையிலே தடைக்கல்லாய் இருந்தது, பலமுடையார் பாதையிலே படிக் கல்லாய் இருக்கும்.

—கார்லைல்

தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கை காலால் நடப்பதற்கு மாறாகத் தலையால் நடப் பது போன்றதாகும்.

—எமர்சன்




**மா**ஸ்கோவில் தேசிய அரசினர் திரைப்படக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. அது 1919-இல் நிறுவப்பட்ட கல்லூரியாகும்.

திரைப்படத் துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் கலைஞர்களை அது பயிற்று விக்கிறது. அதில் ஐந்து துறைகள் உள்ளன. இயக்குநர் துறையானது கதைப் படங்கள், கல்விப் படங்கள், டாக்குமெண்டரிப் படங்கள், வீடியோ படங்கள் ஆகியவற்றை இயக்குவதற்குப் பயிற்சி அளிக்கிறது; ஒளிப்பதிவாளர் துறை, திரைக்கதை மற்றும் திரைப்பட விமர்சனத் துறை, தயாரிப்பாளர் துறை, கலைப்பிரிவு ஆகியவை மற்ற துறைகளாகும்.

அந்தக் கல்லூரியில் விசேடப் படப்பிடிப்பு நிலையம் ஒன்றும் இருக்கிறது. மாண வர்கள் தயாரிக்கும் படங்கள் அந்தப் படப்பிடிப்பு நிலையத்தில் எடுக்கப்படுகின்றன. தங்கள் பயிற்சிக் காலத்தின்போது மாணவர்கள் சொந்தமாகத் திரைக்கதை அமைக்க வும், படமெடுக்கவும், நடிக்கவும் செய்கிறார்கள்.

1944 முதல் அந்தக் கல்லூரி அயல் நாட்டு மாணவர்களுக்கும் திரைப்படத் துறை யில் பயிற்சி அளித்து வருகிறது. ஆண்டுதோறும் 200 அயல் நாட்டு மாணவர்கள் அந்தக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அந்தக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் உலகில் 75-க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றி வரு கிறார்கள்.

## புதிய செயற்கை வைரத் தொழிற்பூங்கா

திருச்சி மாவட்டம் இருங்கலூரில், ஒரு கோடி ரூபாய் செலவில் 40,000 பேர் வாழ்வை ஒளியேற்றி மிளிர வைக்கக்கூடிய செயற்கை வைரத் தொழிற் பூங்கா ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதன் அடிப்படை வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

பம்பாய் மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படக் கூடிய வைர வெட்டுத் தொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு அரசும் இணைந்து, திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே இருங்கலூரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு கோடி ரூபாய் செலவில் செயற்கை வைரத்தொழிற் பூங்காவை அமைக்கின்றன.

ஏற்கெனவே இதுபோன்ற செயற்கை வைரத் தொழிற் பூங்காக்கள் (Synthetic Stone Park) இந்தியாவில் சூரத், ஜெய்ப்பூர், ஹால்ட்வாணி ஆகிய வட இந்திய நகரங்களில் செயல்படுகின்றன. இங்கு தயாரிக்கப்படும் செயற்கை வைரக் கற்களுக்கு அமெரிக்காவில் ஏகப்பட்ட கிராக்கியுள்ளது. தென்னிந்தியாவில்- அதுவும் தமிழ்நாட்டில்தான், முதன் முறையாக இந்தத் தொழிற்சாலை துவக்கப்படுகிறது.

இதுநாள்வரை பழைமையான முறையைக் கையாண்டு, செயற்கை வைரத் தொழில் நடத்தி, நாள் ஒன்றுக்கு ரூ. 15 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தைப் பெற்று வந்த சுமார் 40 ஆயிரம் குடும்பங்கள், இனி நாள் ஒன்றுக்கு ரூ. 60-லிருந்து 70 வரை பெறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கு அளிக்கப்படும் பயிற்சிபெற்றவர்களால் இயந்திரங்கள் மூலம் வெட்டப்பட்டு ஒரே அளவு தரம் மற்றும் சீரமைப்புடன் தயாரிக்கப்படும் கற்களுக்கு மேலை நாடுகளில் பெரும் அளவு வரவேற்புள்ளது. இதன் மூலம் அந்நியச் செலாவணி நிரம்பக் கிட்டும் வாய்ப்புள்ளது.

முதற் கட்டமாக, இத்தொழிற்சாலையை அமைக்க 10 ஏக்கர் நிலம் இருங்கலூரில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தைச் சுற்றியுள்ள 35,000 தொழிற் கலைஞர்களும், தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்து சுமார் 15,000 தொழிற் குடும்பங்களும் பயிற்சியும், பயனும் இதன் மூலம்பெறவிருக்கிறார்கள்.

**எஸ். சுதாகர்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**


# தமிழ்நாடு மின்சார வாரியம்
# வடசென்னை அனல்மின் திட்டம்
## ஒப்பந்த நீட்டிப்பு அறிக்கை

**பணியின் பெயர்:** வடசென்னை அனல் மின் திட்டம் - முதல் கட்டப்பணி - அனல் இயந்திரங்களில் வெப்பத்தைத் தணிக்க கடல் நீர் சுற்றி வருமாறு அமைக்கும் கட்டடப் பணிகள் (Circulating Water System Civil Works)

**ஒப்பந்த வரையறை எண்:** SECT.I/NMTPP/9

மேற்குறிப்பிட்ட பணிக்கான ஒப்பந்தங்களைப்பெறுவதற்கும் திறப்பதற்குமான நாள் 27.12.89-இல் இருந்து நீட்டிக்கப்பட்டு, கீழ்க்குறிப்பிட்ட நாள், நேரத்தில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் | : | 1990 ஜனவரி 10-ஆம் நாள் புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை |
| 2. தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் | : | 1990, ஜனவரி 10-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை |

முந்திய ஒப்பந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மற்ற விதிகளிலும், நிபந்தனைகளிலும் எவ்வித மாறுதலும் இல்லை.

**தலைமைப்பொறியாளர்**
பொதுவியல்/வடிவமைப்பு

DIPR/2687/MS/89/MCS




# இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி

சென்னைத் தீவுத் திடலில், அறிஞர் அண்ணா கலை அரங்கில், 16-வது இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியை, 22-12-89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

திரு. எம். அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், "இந்தக் கண்காட்சி, சமுதாயம் எந்த வகையில் முன்னேற்றம் கண்டு உள்ளது, வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை எழுத்து மூலமாக அல்ல, காட்சி மூலமாக எடுத்துக் காட்டுகிறது" என்றார்.

மாண்புமிகு அறநிலையம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில்,

"இங்கே பேசிய திரு. லத்தீப் எம்.எல்.ஏ. அவர்கள் இந்தப் பொருட்காட்சியை நூறு நாட்கள் நடத்த வேண்டும் என எடுத்துச் சொன்னார். நான் இந்த நேரத்தில் எண்ணிப் பார்ப்பதெல்லாம், தமிழ் நாட்டின் தலைநகரமாக உள்ள சென்னையில் இப்படிப்பட்ட பொருட்காட்சி இரண்டு மாதம் மூன்று மாதம் மட்டுமல்ல, ஆண்டு முழுவதும் நடப்பதற்கான வகையில் அமைக்க வேண்டும் என்பதுதான்.

### நிரந்தரப் பொருட்காட்சி

வெளிநாடுகளில் முக்கியமான நகரங்களில் ஒவ்வொரு இடங்களிலும் பொருட்காட்சி இருப்பதைப் பார்க்க முடியும், அப்படிப்பட்ட வகையில் சென்னையில் ஆண்டு முழுவதும் பொருட்காட்சி நடக்கும் அளவுக்கு, இந்த இடத்தில், நிரந்தரமாக - பொழுதுபோக்கு இடமாக முதல்வர் கலைஞர் அவர்களே மிகுந்த மகிழ்ச்சி கொள்ளும் வகையில் அமைக்கப்பட வேண்டும் என்று தான் விரும்புகிறேன்."

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"நான் மேற்கொண்ட ஐரோப்பிய நாட்டுப் பயணத்திற்குப் பிறகு அதிலே எழுந்த எண்ணத்தின் விளைவாக, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ஆம் ஆண்டு தமிழகத்தில் அமைக்கப்பட்டு, அதனுடைய தலைவராக அருமை நண்பர் மறைந்த தோழர் ஏ.வி.பி. ஆசைத் தம்பி அவர்கள் பணியாற்றுகின்ற பொறுப்பினை ஏற்று, அவருடைய

அரும் முயற்சியினால் இந்தத் துறை நல்ல முறையிலே வளர்க்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1974-ஆம் ஆண்டு சென்னை மாநகரத்திலே இந்தப் பொருட்காட்சி தொடங்கப் பட்டது. 1974-அம் ஆண்டு முதல் இதுவரை இடையிலே ஒரே ஒரு ஆண்டு தவிர, மற்ற எல்லா ஆண்டுகளிலும் இந்தப் பொருட் காட்சி இந்த இடத்தில் மிகச் சிறப் போடும் சீரோடும் மக்களுடைய பெரும் ஆதரவோடும், வரவேற் போடும், பாராட்டுக்களோடும் நடை பெற்று வருவதை நீங்கள் மிக நன் றாக அறிவீர்கள்.

### அகில இந்தியா, அனைத்து இந்தியா

''இந்தப் பொருட்காட்சியை 'அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி' என்று நாம் அழைக்கின்றோம். வரவேற் புரையிலே சுற்றுலாத் துறைச் செயலர் குறிப்பிட்டதைப் போல வும், தலைமை உரையிலே சுற்று லாத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போலவும், இந்தப் பொருட்காட்சி அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சி என்ற தலைப்பில் நடத்தப்பட்டு வருகின் றது. இங்கே என்னுடைய நண்பர் புலவர் நன்னன் அவர்கள் இருக்



கிறார்கள். அவர்கள் அண்மையிலே தான் இந்த அகில இந்தியா என்பது குறித்தும், அனைத்து இந்தியா என்பது குறித்தும் ஒரு ஆராய்ச்சி யைப் பத்திரிகையிலே எழுதியிருந் தார்கள். அதனைப் படித்துப் பார்த் தேன்.

''அகில இந்தியா என்று சொல் வது சரியா? அல்லது அனைத்து இந்தியா என்று சொல்வது சரியா? என்ற கேள்விக்கு என்னைப் பொறுத்தவரையில் எனக்குக் கிடைத்த விடை இரண்டுமே சரியில்லை என் பதுதான்.

''அகிலம் என்றால் உலகம். அகில இந்தியா என்று சொல்லும் போது உலக இந்தியா என்றாகிறது. எனவே அகில இந்தியா என்பது இதுவரையில் ஒரு தவறான பொரு ளில் பயன்படுத்தப்பட்டு வந்திருக் கின்றது. அகிலம் என்றால் உலகம் என்பதற்கு நான் புதிய உதாரணங் களைத் தேடித் தர விரும்பவில்லை. உங்களிலே பலருக்குப் பழக்கப்பட்ட ஆதாரத்தையே சொல்கிறேன். ''அகிலாண்டேஸ்வரி'' என்று வணங்குகின்ற தெய்வத்தைக் குறிப் படும்போது உலகத்திற்கே அவள் தேவி என்கின்ற அந்தக் கருத் திலேதான் அகிலம் என்றசொல் பயன்படுத்தப்படுகின்றது. எனவே அகில இந்தியா என்று சொல்லும் போது ''உலக இந்தியா'' என்ற பொருள் வருகின்ற காரணத்தால் அது பொருத்தமாக இல்லை.

''அப்படியானால் அனைத்து இந்தியா என்று சொல்லலாமே என்கின்ற ஒரு கருத்து எழுமே யானால், அதற்கு நம்முடைய புலவர் நன்னன் அவர்கள் தருகின்ற மறுப்பு ஏற்றுக் கொள்ளக்கூடிய மறுப்பாக இருக்கின்றது.

''அனைத்து என்கின்ற சொல் எப்போது வருகிறதென்றால், பல வற்றை ஒன்று சேர்க்கின்ற நேரத் திலே அனைத்து என்கின்ற சொல் வருகின்றது. ஒரு இருபது அல்லது



இருபத்தைந்து உறுப்பினர்கள் ஒரு மன்றத்திலே இருக்கின்றார்கள். நாம் அவர்களை ஒரு விழாவிற்கு வரவேண்டுமென்று அழைக்கிறோம். அப்படி அழைக்கும்போது எல்லோரும் வரவேண்டுமா? என்று அவர்களிலே யாராவது கேட்டால், அனைத்து உறுப்பினர்களும் வர வேண்டுமென்று நாம் சொல்கிறோம். அனைத்து உறுப்பினர்களும் வரவேண்டுமென்று சொல்லும்போது, இருக்கின்ற இருபது பேரோ, இருபத்தைந்து பேரோ அவ்வளவு பேரும் வரவேண்டும் என்ற பொருளிலேதான் அனைத்து உறுப்பினர்களும் வரவேண்டுமென்று சொல்கிறோம். எனவே அனைத்து இந்தியா என்றால், ஏழெட்டு இந்தியா உலகத்திலே இருப்பதைப் போலவும், எனவே அனைத்து இந்தியாவும் சேர்ந்தது தான் இந்த அனைத்திந்தியா என்று சொல்லுவதைப் போலவும் ஆகிவிடுகின்றது. ஒரே இந்தியா என்ற குரலை வலுவாக இன்றைக்கு எழுப்பிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில், அனைத்திந்தியா என்று சொல்லி, பல இந்தியாக்கள் உலகத்திலே இருப்பதை நாமே ஒப்புக் கொண்டவர்களாக ஆகிவிடக்கூடாது என்பதால்-அனைத்திந்தியா என்கின்ற அந்தச் சொல்லும் ஏற்றதாகத் தெரியவில்லை.

## இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி

''நான் கேட்கின்றேன்-உங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ''அகிலம்'', ''அனைத்து'' என்கின்ற சொற்களையும் விட்டு விட்டு, 'இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி' என்று சொன்னால், புரியாமல் போய் விடுமா? நான் கூட எண்ணிப் பார்த்தது உண்டு. இதை அனைத்து மாநிலங்கள் சுற்றுலாப் பொருட்காட்சி என்று அழைக்கலாமே என்று! அப்படியானால் இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலத்தினுடைய பங்கேற்பும் இந்தப் பொருட்காட்சியிலே இருந்தால் தான் அனைத்து மாநிலங்கள் என்று அழைக்க முடியும். ஒரு பத்து-பதினைந்து மாநிலங்கள் பங்கு பெற்று, ஒரு ஐந்தாறு மாநிலங்கள் இங்கே பங்கேற்கவில்லையென்றால், அனைத்து மாநிலப் பொருட்காட்சி என்று



அழைக்க முடியாது. எனவே இந்த வம்பே வேண்டாமென்று இனி மேல் இதனை 'இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி' என்று அழைப்பதே சரியாக இருக்கும் என்பதனை நான் இங்கே எடுத்துக் கூறுவதோடு, என்னிடத்திலே நிதி வேண்டுமென்று கேட்ட நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், முதலில் இந்தத் திருத்தத்தைச் செய்யுங்கள், பிறகு அந்த நிதியைப் பற்றி-யோசிக்கலாம் என்று கூறவும் நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## தொழில் வளர, கலை வளர...

''சுற்றுலாவின் மூலமாகக் கலாச்சார உறவுகள் ஏற்படவும், சுற்றுலா மூலமாக உலகத்தைத் தெரிந்து கொள்ளவும், சுற்றுலா மூலமாகத் தொழில் வளரவும்-கலை வளரவும்-இலக்கியச் செல்வங்கள் பெருகவும் வழிவகை ஏற்படுகிறது என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். இங்கே தொடர்ந்து நடைபெறுகின்ற இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் ஆண்டுதோறும் வளர்ச்சி ஏற்பட்டு கடந்த ஆண்டில் நிகர லாபமாக ஏறத்தாழ 25 இலட்ச ரூபாய் அளவிற்குக் கிடைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, சென்னை மாநகரத்து மக்கள் மாத்திரம் அல்ல, தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே வாழ்கின்ற மக்கள் மிகுந்த விருப்பத்தோடு இந்தப் பொருட்காட்சிக்கு வருகின்றார்கள் என்பதும், பொருட்காட்சியிலே பங்கேற்பவர்களும் தாங்கள் ஆற்றுகின்ற கடமைக்கு ஏற்ற ஒரு ஆதாயத்தைப் பெறுகிறார்கள் என்பதும் அனைவருக்கும் விளங்கும் என்றே நான் நம்புகின்றேன்.

''சுற்றுலாவின் மூலமாக ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்திலேயே பெரும் உயர்வு ஏற்படுகிறது என்பதை வெளிநாடுகளிலே நாம் காண முடிகிறது. வெளிநாடுகளில் அவர்கள் வளர்க்கின்ற பல்வேறு துறைகளில் மிக முக்கியமான துறையாக அமைந்திருப்பது சுற்றுலாத் துறையாகும். சுற்றுலாவின் வாயிலாக இத்தாலி போன்ற நாடுகளில், ரோமாபுரி போன்ற நகரங்களில், வருகின்ற வருமானம் இன்றைக்கு அந்த நாட்டின் பொருளாதாரத்திலே மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

## தொன்மை வாய்ந்த வரலாற்றுப் புதையல்கள்

''நான் பல ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தபோது, அந்த நாடுகள் அனைத்துமே சுற்றுலாவின் மூலமாகப் பெரும் பொருளை, ஆண்டுதோறும் வருமானமாக ஈட்டுகின்றன என்ற குறிப்புக்களை அந்தந்த அரசுத் துறையினரோடும், அமைச்சர்களோடும் பல்வேறு அதிகாரிகளோடும் கலந்து பேசியதன் மூலமாக அறிந்தேன்.

''திரும்பியபோது, அன்றைய தினம் இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி

## "இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி" — எனப் பெயர்மாற்றம்:

16-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை 22.12.89 அன்று துவக்கி வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றும்பொழுது, 'அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி' என்பதில், அகில இந்தியா என்றால் உலக இந்தியா என்ற பொருள் வருகின்ற காரணத்தால் அது பொருத்தமாக இல்லை. அனைத்திந்தியா என்றால் ஏழெட்டு இந்தியா உலகத்தில் இருப்பதுபோல ஆகும் என்பதால் இதனை 'இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி' என்று அழைப்பதே சரியாக இருக்குமென்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து, விழா இறுதியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர், திரு. பி.பி. ரெங்கசாமி பேசும்பொழுது, 'முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க இனிமேல் இது 'இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி' என்று அழைக்கப்படும்' என்று அறிவித்தார்.

அவர்களைச் சந்தித்து, வெளிநாடுகளிலே சுற்றுலாத் துறையின் மூலமாக ஈட்டுகின்ற வருமானத்தைப் போல இந்திய நாட்டிலும் ஏன் இந்த முயற்சியை மேற்கொள்ளக்கூடாது என்று விவாதித்தேன். வெளிநாடுகளிலே வழங்கப்படுகின்ற அஞ்சல் உறைகள் போன்றவைகளில் அழகாக அச்சேற்றப்பட்டிருக்கின்ற அந்தந்த வட்டாரத்தினுடைய சுற்றுலாத் தோற்றங்கள், காட்சிகள் இவைகளையெல்லாம் கூட அவர்களிடம் நான் எடுத்துக் காட்டினேன். எனக்கு முன்பு பல முறை அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தாலுங்கூட, அவர்களுடைய கவனத்திற்கு அவைகள் எல்லாம் கொண்டு வரப்படாத காரணத்தால், நான் அதை எடுத்துச் சொன்ன நேரத்திலே மிகுந்த ஆர்வத்தோடு அதனைக் கேட்டார்கள்.

"நான் அவர்களிடம் குறிப்பிட்டேன். எந்த ஒரு விமான நிலையத்திலும் ஏன் விமானப் பயணத்திலுங்கூட, வெளி நாட்டிலிருந்து நம்முடைய சொந்த ஊருக்கு, நண்பர்களுக்கு, உறவினர்களுக்குக்கடிதம் எழுத விரும்பினால் அங்கே விமானத்திலோ, விமான நிலையத்திலோ தாம் பெறுகின்ற அஞ்சல் அட்டைகள், அஞ்சல் உறைகள் அனைத்தும் அந்தந்த நாட்டினுடைய சுற்றுலா வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலே-அங்கே சென்றால் எந்தெந்தக் காட்சிகளைக் காணலாம், எத்தகைய இயற்கை விசித்திரங்கள், விநோதங்கள் அங்கே இருக்கின்றன, தொன்மை வாய்ந்த வரலாற்றுப் புதையல்கள் எவை எவை என்பதையெல்லாம் எடுத்துக்காட்டும் வகையிலேதான் அவைகள் அங்கே அமைந்திருக்கின்றன. எனவே, அது போன்ற முயற்சியிலே இந்திய நாடும் ஈடுபட வேண்டுமென்று அம்மையாரிடம் அன்றைக்கே சொன்னேன்.

"அவர்களிடம் சொன்னதோடு அமையாமல், தமிழகத்திற்கு வந்தவுடன் தமிழக அரசின் சார்பில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தையும் உருவாக்கி அதன் தொடர்ச்சியாக இந்தப்பொருட்காட்சியையும் நடத்துகின்ற முயற்சியிலே ஈடுபட்டு அதிலே தொடர்ந்து நாம் வெற்றியினைப் பெற்று வருகின்றோம்.

### இராமாயணமும், சிலப்பதிகாரமும்

"நம்முடைய இதிகாசங்கள், இலக்கியங்கள் இவைகளைப் பார்த்தால்கூட - நான் பல முறை குறிப்பிட்டிருக்கின்றேன்-அவைகள் எல்லாம் சுற்றுலா நோக்கத்தோடுதான் எழுதப்பட்டிருக்கின்றன. இதிகாசம் எனப்படும் ராமாயணத்தை எடுத்துக் கொண்டால், ராமாயணக் கதையை எழுத முற்பட்ட வால்மீகியோ அல்லது அதனைத் தமிழிலே தமிழாக்கம் செய்த, தமிழ்ப் பண்பாட்டிற்குச் சிறிதும் ஊனம் ஏற்படாமல் தர வேண்டும் என்கின்ற விருப்பத்தோடு தந்த கம்பனோ சுற்றுலாவையும் அடிப்படையாக வைத்துத்தான் ராமாயணத்தை மக்களுக்குத் தந்திருக்கின்றார்கள். ராமாயணக் கதை அயோத்தியிலிருந்து புறப்பட்டு, தண்டகாருண்யம் வரை வந்து, இலங்கை வரையிலே செல்கிறதென்றால், அந்த நெடுந்தொலைவிற்கும் உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை நமக்கு அறிமுகப்படுத்தும் வகையிலேதான் ராமாயணம் அமைந்திருக்கிறது. வடக்கேயிருந்து தெற்கே வந்த ஒரு மன்னனின் மகனின் கதையை எடுத்துக் காட்டுவது ராமாயணம் என்றால், அதற்குப் பிறகு எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள்-சரி நீ வடக்கே இருந்து வந்தாயா? நான் தெற்கேயிருந்து வடக்கே வருகிறேன்-என்று அவர் காவிரிப்பூம்பட்டினத்திலேயிருந்து புறப்பட்டு-வடபுலத்திலே இமயம் வரையிலே சேரன் செங்குட்டுவனை அழைத்துச் சென்று இமயத்திலே கல்லெடுத்து, கனகவிஜயன் தலையிலே கல்லேற்றி, அதனைக் கண்ணகிக்குச் சிலை வடிக்கும் வகையிலே சேரநாடு வரையிலே கொண்டு வந்தான் என்று சிலப்பதிகாரத்தையும் ஒரு சுற்றுலா வரலாறாக-சுற்றுலாக் கதையாகத்தான் இளங்கோவடிகள் நமக்குத் தந்திருக்கிறார். அதனுடைய சிறப்பு சோழநாடு, பாண்டிய நாடு, சேர நாடு-வட நாட்டிலே உள்ள மன்னர்கள்- அந்த மன்னர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகள்-அவர்களுடைய வீரம், வெற்றி-அந்த வெற்றிகளை எல்லாம் பின்னடையச்செய்கின்ற அளவிற்குச் சேரன் செங்குட்டுவன் நடத்திய போர்-இவைகள் அனைத்தும்



1.1.1990




அதிலே இடம் பெற்றிருக்கின்ற காரணத்தால், இதிகாசம் என்ற அளவிலே ராமாயணம் ஒரு சுற்றுலா நூலாகவும், இலக்கியம் என்கின்ற வகையிலே சிலப்பதிகாரம் ஒரு சுற்றுலா நூலாகவும் நமக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே இந்தச் சுற்றுலா எண்ணம் இன்று நேற்றல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய நாட்டு மக்களுடைய உள்ளத்திலே ஊறிப் போன ஒன்றாகும். அதனால்தான் அந்தக் காலத்திலே காசிக்குச் சென்று வந்தாலும் கிராம மக்கள் காசிக்குச் சென்று வந்தவர்களின் காலைத் தொட்டுக் கும்பிடுவார்கள். அது காசிக்குச் சென்று வந்த கால் என்பதற்காக! காசிக்குச் செல்வது அவ்வளவு புண்ணியமான காரியம் என்று அன்றைக்கு எண்ணப்பட்டது. இவைகள் எல்லாம் சுற்றுலா நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியங்கள். ஆனால் இன்றைக்குக் காசிக்குச் செல்லாமலே நம்முடைய சில வீடுகளிலே நடைபெறுகின்ற திருமணங்களில் மாப்பிள்ளை காசி யாத்திரை போகிறார் என்று சொல்லி-ஒரு தெருவைச் சுற்றச் சொல்லி - அவர் காசிக்குப் போய் விட்டு வந்ததாக நாம் அந்த ஐதீகத்தை மாத்திரம் பின்பற்றுகிறோம்.

"இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற விஞ்ஞான யுகத்தில் சுற்றுலா என்பது உலகத்தினுடைய தொலைவைக் குறைக்கக் கூடிய அளவிற்கு ஆகிவிட்ட ஒன்றாகும். ஐம்பது, அறுபதாண்டுகளுக்கு முன்பு இரண்டாயிரம் மைல்களைக் கடப்பது என்றால் பத்து நாளோ, பதினைந்து நாளோ ஆகும். ஏன் சென்னை ராஜ்யத்தின் பிரதமராக (முதல் அமைச்சராக) ஓமந்தூரார் காலத்திலே வாங்கப்பட்ட 'அனுமான்' என்ற விமானம் அன்றைய தினம் சென்னையிலேயிருந்து ஆறு மணிக்குப் புறப்பட்டால், பல இடங்களிலே தங்கி, தங்கி, மறுநாள் காலையில்தான் டெல்லி போய்ச் சேருமென்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். இப்போது சென்னையிலிருந்து ஆறு மணிக்குப் புறப்பட்டால் எட்டரை மணிக்கு-இரண்டரை மணி நேரத்தில் டெல்லிக்குப் போய்ச் சேரக்கூடிய அளவிற்குத் தொலைவுகள்-உலகத்திலே உள்ள நாடுகளுக்குள்ளே இருக்கின்ற தொலைவுகள் — சுருக்கப்பட்டிருக்கின்ற காலக்கட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், இந்தச் சுற்றுலாவின் மூலமாகப் பெரும் பயனை நம்முடைய நாடு அடைய வேண்டும்.

"பல நாடுகளிலே உள்ள நகரங்களே நாம் இங்கே உருவாக்கிக் கொண்டிருக்கின்ற பொருட்காட்சியைப் போலவே அமைந்திருக்கின்றன. அந்த நகரங்களே நாம் அமைக்கின்ற பொருட்காட்சிகளைப் போல அமைந்திருக்கும்போது, நாம் அவற்றுக்கு ஒப்பாக நம்முடைய பொருட்காட்சியை அமைக்க முடியுமா என்ற வினா தோன்றுவது இயல்பேயாகும். இருந்தாலும்கூட ஏழைகள் மிக அதிகமாக வாழ்கின்ற இந்த நாட்டில் ஏழைகளுக்கு மிக மலிவான பொழுதுபோக்காகவும், அந்தப் பொழுதுபோக்கை அவர்கள் பயன்படுத்துகின்ற நேரத்திலே அவர்கள் உள்ளத்திலே பதியத்தக்க நல்ல கருத்துக்களை ஊன்றுகின்ற ஒரு நற்பணியாகவும் இந்தப் பொருட்காட்சியும் இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முயற்சியும் அமைகிறது என்பதை நான் இங்கே எடுத்துக்கூறி, இந்தப் பொருட்காட்சி எல்லாவகையிலும் சிறப்புற்று விளங்கிட, பொதுமக்களுடைய ஒத்துழைப்பும், கலைஞர் பெருமக்களுடைய ஒத்துழைப்பும், எல்லாத் தரப்பினருடைய ஒத்துழைப்பும் மிக மிகத் தேவை என்பதை எடுத்துக் கூறி இந்த இனிய நிகழ்ச்சியை நான் தொடங்கி வைக்கின்றேன்."

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னை மாநகரின் 350 ஆண்டுக்கால வளர்ச்சியை விளக்கும் புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. பி.பி. ரங்கசாமி, இ.கா.ப. அவர்கள் நன்றி கூறினார். திரு. தாயன்பன் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடந்தது.

—நிகழ்ச்சித் தொகுப்பு
பி.வி. கிரி



# சிறந்த நூல்களே சிறந்த நண்பர்கள்

பா. நாராயணமூர்த்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
செங்கை-அண்ணா மாவட்டம்

தமிழகத்தில் சென்னை, கோவை, பெரியார் மாவட்டங்களில் கிளை நூலகம் இல்லாத பகுதிகளுக்கு 'ஊரக இயங்கு நூலகம்' (Rural Mobile Library) இயங்கி வருவதுடன், இரவு நேரங்களில் திரைப்படக் காட்சிகள் மூலமும் மக்கள் பயனடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீடு தேடி நூல் வழங்கு திட்டத்தின் கீழ் மகளிருக்கு, அவரவர் வீட்டுக்குச் சென்று நூல்கள் வழங்கும் பணிக்காக இயங்கு நூலகங்கள் கோவையில் மூன்றும், மதுரையில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும் ஆக 5 இயங்கு நூலகங்கள் செயல்படுகின்றன.

இந்தியாவில் எழுபது ஆண்டுக் காலமாக நூலக இயக்கம் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் 1948-ஆம் ஆண்டு முதல் 41 ஆண்டுக் காலமாகப் பொது நூலகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 18 மாவட்ட மைய நூலகங்களும், 9 இயங்கு நூலகங்களும், 1,515 கிளை நூலகங்களுமாக மொத்தம் 1,543 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாது, மக்களின் ஆர்வத்திற்கு ஏற்ப தற்போது வீதிக்கு வீதி வாடகை நூலகங்களும், அலுவலகங்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களிடையே சுற்றோட்ட நூலகமும் இயங்கி வருவதும் மக்களின் படிப்பார்வத்தை அறியக் கூடியதாகும்.

செங்கல்பட்டில் மாவட்ட நூலகம், 1953-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1955-இல் 12 கிளைகளுமாக வளர்ந்து, 1966-இல் 100 கிளைகளாகப் பெருகி, 1989-இல் 119 கிளை நூலகங்களுடன் ஒரு மாவட்ட மைய நூலகமாகப் பெருகி வளர்ந்துள்ளது. 1988-89-ஆம் ஆண்டு வரை 1,28,000 உறுப்பினர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது மக்களின் படிப்பார்வத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

தமிழ்நாட்டிலுள்ள 1,543 நூலகங்களில், 175 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 538 நூலகங்கள் வாடகையில்லாத கட்டடங்களிலும், 830 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்படுகின்றன.

5,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்கள்தோறும் கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு, இம்மாவட்டத்தில் 120 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் மேலும் 26 கிராமங்களில் கிளை நூலகம் திறக்கப்பட வேண்டியுள்ளது. கிளை நூலகங்கள் திறக்க இயலாத, மக்கட் தொகை குறைவாக உள்ள கிராமங்களில் நூலகச் சேவை 'வழங்கு முனைகள்' 28 இடங்களில் செயல்படுகின்றன. அதுவல்லாது வீடு தேடி நூல் வழங்கு திட்டத்தின் 37 கிளை நூலகங்களில் மிதி வண்டி மூலம் மகளிர்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

செங்கை-அண்ணா மாவட்டத்திலுள்ள 120 நூலகங்களில் 12,25,000 நூல்கள் உள்ளன. இந்த அரசு பதவியேற்ற உடன் செங்கை-அண்ணா மாவட்டத்தில் இந்த ஆண்டில் மட்டும் 30 இலட்சம் வாசகர்கள்படித்துச்செல்ல வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நூலகத்தில் மருத்துவப்படிப்பு மாணவர்களும் பொறியியல் கல்லூரி மாணவர்களும் பயனடைய, தேவையான பாட நூல்களிலிருந்து குறிப்பு எடுத்துத்தர நகல் எடுக்கும் (ஜெராக்ஸ்) வசதியும் உள்ளது.

செங்கல்பட்டில் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாவட்ட மைய நூலகக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் கலந்துகொண்டு பேசும் போது, ''கல்லூரி மூலம் பெறும் அறிவை இந்த நூலகம் தருகிறது. அறிவுக்கு எல்லை இல்லை. நமது அறிவை வளர்க்க இந்த நூலகம் பயன்படும். சிறந்த நூல்களே சிறந்த நண்பர்கள். நல்ல புத்தகத்தை விட உற்ற துணைவன் யாரும் இல்லை'' என்று குறிப்பிட்டு நூலகம் கட்ட நிலம் கொடுத்த நன்கொடையாளர்களின் பரந்த உள்ளத்தைப் பாராட்டினார்.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

தமிழரசு 16.12.89 இதழ் 42-ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய, விளம்பர எண்:66 இல், 'இறுதி நாள்:8.1.1989 அன்று மாலை 5.30 மணி' என்பதை 8.1.1990 அன்று மாலை 5.30 மணி என்று திருத்திப் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

# கொடிநாள் நன்கொடை தமிழ்நாட்டிற்கு முதலிடம்!

மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

''மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கொடிநாள் அமைப்புக் குழு நிர்ணயித்திடும் இலக்கினையும் எஞ்சி, வாரி வழங்கும் வள்ளல்களாகத் தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருவது நமது போற்றுதலுக்கும், நன்றிக்கும் உரியதாக விளங்குகிறது.

''இதனை மத்திய அரசு கண்ணுற்று, 1985-ஆம் ஆண்டிற்கு அதிக அளவு நன்கொடை பெற்ற மாநிலமாகிய தமிழ்நாட்டுக்கு அகில இந்தியக் கோப்பையை வழங்கினார். 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்கும் இக் கோப்பையைத் தமிழ்நாட்டு மக்கள் தம் வசம் தக்க வைத்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

''இதுமட்டுமின்றி, மக்கள் தொகையையும், வருவாயையும் கணக்கில் கொண்டு அதிக அளவில் நன்கொடை பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு அறிவிக்கப்பட்டு அதற்குரிய கோப்பையும் 1986 மற்றும் 1987-ஆம் ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு இந்திய அரசால் வழங்கப் பட்டது. கடந்த ஆண்டு ரூ.102 இலட்சம் நன்கொடை வழங்கி, இப்பெருமையைப் பெற்றவர்கள் தமிழ்நாட்டு மக்கள்.

''படையின் முதியோர் ஓய்வு இல்லம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு வேலூரில் அமைத்துள்ளது. இத்தகைய நிலையத்தினை முதலில் ஏற்படுத்திய மாநிலம் தமிழ்நாடு.

''கைம்பெண்கள் உச்ச நீதிமன்றத்தினை அணுகுவதற்கு முன்பே 1.1.64க்கு முன் படைப் பணியில் இருந்து ஓய்வு பெற்று இறந்த படை வீரர்களின் மனைவியருக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மாதந்தோறும் நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்தது தமிழ்நாடு.

''முன்னாள் படைவீரருக்கு நிதியுதவி அளிப்பதற்கு மட்டுமன்றித் தொழிலகங்கள் அமைத்து வேலைவாய்ப்பு உருவாக்க வழி செய்யும் வகையில் ''தமிழ்நாடு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம்'' ஒன்றினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு. சுயதொழில் தொடங்குவதற்காக வங்கிகளிலிருந்து முன்னாள் படைவீரர்கள் பெறும் கடன்களுக்கு வட்டி உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடே!

''முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு எனப் பல ஒதுக்கீடுகளை மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் நிர்ணயித்து இருப்பினும், இவற்றின் பயன் பாட்டினைக் கண்காணிப்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்றினை முதலில் அமைத்ததும் தமிழ்நாடு.

''பெற்ற சுதந்திரத்தினைக் காத்திடும் உணர்வு வளர்ந்திட முன்னாள் படைவீரர்களை மதித்துப் பாராட்டும் வகையில், சென்னையில் மேதகு ஆளுநர் அவர்களும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும் கொடிநாள் அன்று முன்னாள் படைவீரர்களைத்தேநீர் விருந்திற்கு அழைத்துப் பாராட்டுவதை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடு.

''முன்னாள் படைவீரர்கள் அவர்களைச் சார்ந்தோரின் குறைகளை மாதந்தோறும் குறிப்பிட்டதொரு நாளில் மாவட்ட ஆட்சியர்கள் நேரில் கேட்டு அவர்களின் குறைகளை விரைந்து தீர்த்திடும் திட்டத்தைச் செயல்படுத்தியதும் தமிழ்நாடே ஆகும்.

''சிறுநீரக மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றிற்கும் முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி அளித்திடும் திட்டத்தினை முதலில் செயல்படுத்தியதும் தமிழ்நாடேயாகும்.

''இவ்வாறு நலத் திட்டங்கள் பலவற்றை நடைமுறையில் செயல்படுத்தியது தமிழ்நாடு'' என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

''1989 ஜனவரித்திங்களில் நடைபெற்ற தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தலில் 23,000 முன்னாள் படைவீரர்களும், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் 26,000 முன்னாள் படைவீரர்களும் சிறப்புக் காவலர்களாக நன்முறையில் பணியாற்றியதும், அவர்களின் நடுநிலைத் தொண்டு அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளதும் இங்கு பாராட்டிக் குறிப்பிட வேண்டியதாகும்.''

-'கொடிநாள்' அன்று வானொலி-தொலைக்காட்சி ஆகியவற்றில் ஆற்றிய உரையிலிருந்து.

## பேரறிஞர் அண்ணா கருத்துமணிகள் வரிசையில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள முதல் நூல்

# 'அண்ணா போற்றிய பெருமக்கள்'

திருவள்ளுவர் முதல் இன்றைய ஆன்றோர்கள், சான்றோர்கள், இந்திய விடுதலை இயக்கத் தலைவர்கள், திராவிட இயக்கத் தலைவர்கள், அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் பணியாற்றிச் சிறந்த தமிழ்நாட்டுப் பெருமக்கள் ஆகியோர் பற்றி மறைந்த தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டுரைகள் அடங்கிய ஓர் இலக்கியக் கருவூலம் 'அண்ணா போற்றிய பெருமக்கள்' (முதல் தொகுதி) என்னும் நூல். இது வரலாற்று ஆய்வுக்கு மிகவும் பயன்படக்கூடிய அரிய இலக்கியப் பேழை.

**பக்கங்கள் : 456**

**விலை : ரூ.46/-**




**நூல் கிடைக்குமிடங்கள்:**

1) 'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

2) வள்ளுவர் கோட்டம்,
சென்னை-600 034.

3) அண்ணா சதுக்கம்,
சென்னை-600 005.

(4) மாவட்ட
செய்தி-மக்கள் தொடர்பு
அலுவலகங்கள்

குறிப்பு: பத்துப் படிகளும் அவற்றுக்கு மேலும் வாங்குவோருக்கு நூற்றுக்கு 15 விழுக்காடு கழிவுத்தொகை உண்டு.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள்




உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23







இந்திய சுற்றுலாப் பொருட்காட்சி தொடக்க விழா (22-12-89)